பக்கங்கள்: 19

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 18 ஞாயிற்றுக்கிழமை 04.12.2022 கதிர் 29

**இனி இது ரகசியம் அல்ல!**

சட்ட முறையற்ற விதத்தில் நியதி சட்டத்தைப் பிரகடனப் படுத்தி, அதன் கீழ் 'வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தை' அமைத்து, அதன் வாயிலாக சிங்களவர் ஒருவரைப் பணியகத் தலைவராக நியமித்து, சென்னை - பலாலி ☞2

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் 2 மாதங்களில் நாடாளுமன்றுக்கு!

## சபை முதல்வர் நேற்று அறிவிப்பு



பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இன்னும் இரு மாத காலத்திற்குள் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவிற்கு பதிலளித்தார்

சபாநாயகர் தலைமையில் நேற்று சனிக்கிழமை நாடாளுமன்ற அமர்வு கூடிய போது நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞2



## இலங்கையின் மீட்சிக்கு அமெரிக்கா உதவி தரும்

### சப்ரியிடம் பிளிங்கன் உறுதி

இலங்கை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும் என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி ☞2

## இலங்கையின் கடனுக்கு 10 வருட சகாயம் பாரிஸ் கிளப் கடன் வழங்கும் நாடுகள் தரும்

பாரிஸ் கிளப் கடன் வழங்கும் நாடுகள், இலங்கையின் கடனுக்கு 10 வருட கால அவகாசத்தை முன்மொழிந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடன் அவகாசக் காலத்துக்கு மேலதிகமாக இலங்கையின் தற்போதைய நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரு சூத்திரமாக பாரிஸ் கிளப் மேலும் 15 வருட கடன் மறுசீரமைப்பை முன்மொழிந்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான கலந்துரையாடல்களை தற்போது இலங்கையுடன் நடத்தும் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் நடவடிக்கையில் இந்த முன்மொழிவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## நாணய நிதியக் கடன் நிவாரணம் ஜனவரியில் சாத்தியமாகும் நிலை



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உத்தேச கடன் நிவாரணம் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் சாத்தியப்படும்நிலைமைகாணப்படுவதாக இராஜாங்க நிதி அமைச்சர் ☞2

## களனி மின் உற்பத்தி நிலையம் நேற்று இரவு மூடப்படவிருந்தது



புதிய நாப்தா (எரிபொருள்) விநியோகிக்கப்படாமையால் களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையம், நேற்று நள்ளிரவு மூடப்படவிருந்தது.

இது பற்றிய எச்சரிக்கையை இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் விடுத்துள்ளது.

இதுவரை நப்தா கிடைக்கவில்லை என்றும் ☞18

## மக்கள் போராட்டம் மீண்டும் வெடிக்கும்


### எச்சரிக்கிறார் முஜிபுர் ரஹ்மான்



இலங்கையில் உக்கிரமடைந்து செல்லும் பொருளாதார நிலைமை காரணமாக மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கும். அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எச்சரிக்கைக்கு அஞ்சப் ☞18

## கொழும்பு - பலாலி இடையே 'லயன் எயார்' விமான சேவை

### அதுவும் 12 ஆம் திகதி ஆரம்பம்



கொழும்பில் இருந்து யாழ். பலாலி விமான நிலையத்துக்கான 'லயன் எயார்' விமான சேவை இம்மாதம் 12ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும். வடக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்டு சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை விரிவுபடுத்த விசேட ☞18

## வட. - கிழக்கு மாகாண வீட்டுத் திட்டங்களை இடையில் நிறுத்தாமல் முடித்துத் தாருங்கள்!

### நாடாளுமன்றத்தில் செல்வம் மன்றாட்டம்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடைநிறுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

எமது மக்கள் படும் துன்பம் குறித்து கரிசனை கொள்ளுங்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ☞18



## மருந்துத் தட்டுப்பாடு பெரும் நெருக்கடி; மக்கள் பிரதிநிதிகள் கவனிக்க வேண்டும்

### பெரும் விசனம் தெரிவிக்கின்றார் ஆறு. திருமுருகன்

தற்போது யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடுகள் நிலவி வருகின்றது. நாடு முழுவதும் பொருளாதாரப் பிரச்சினை இருக்கும் சமயத்தில் யாழ் மக்களின் பிரதான வைத்தியசாலைகளில் குறிப்பிட்ட மருந்துகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. வைத்தியர்கள் மருந்துகளை வெளியே வாங்குமாறு நோயாளருக்கு ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான சேவை விவகாரத்தை அவர் மூலம் கையாள வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்தாலும், மறுபுறத்தில் அந்தச் சேவையைத் தங்கு தடையின்றி ஒழுங்காக மீள ஆரம்பித்து நடத்துவதில் இந்தியத் தரப்பு மிக மும்மரமாக இருப்பதாக தெரிகின்றது.

வரும் 12ஆம் திகதி தொடக்கம் வாரத்தில் நான்கு நாள்கள் - திங்கள், செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் - 'அலையன்ஸ் ஏயர்' நிறுவனத்தின் ஏ.ரி.ஆர். 72 ரக விமானம் சென்னையில் இருந்து காலை 10 மணி வாக்கில் பலாலி வந்து, நண்பகலில் திரும்பும். விமானம் சிறியது. ஒரு தடவையில் 60 பயணிகள் வரை பயணிக்க கூடியதாக இருக்கும் என்று தெரிகின்றது. நாளை முதல் டிக்கெட் பதிவு ஆரம்பமாக உள்ளது.

டிக்கெட் கட்டணம் முன்னர் எதிர்பார்த்த அளவு அதிகமாக இல்லை. இரண்டு வழி பயண கட்டணம் இந்திய நாணயப்படி 12 ஆயிரத்து 750 ரூபா வரை இருக்கும் எனக் கூறப்பட்டது. அதன்படி இலங்கை பணத்தில் சுமார் 65,000 ரூபா - இரு வழிக் கட்டணம்.

விமான நிலையப் பயணிகள் கட்டணமாக கட்டுநாயக்காவில் ஒருவருக்கு அறுபது டொலர் அறைவிடப்படுகின்றது. அதே கணக்கே பலாலிக்கும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அதை பலாலிக்கு அரைவாசியாக குறைக்க இலங்கை விமான சேவைகள் அதிகார சபை கொள்கை அளவில் இணங்கி அதற்கான சம்மதத்தை தெரிவித்தும் இருந்தது. எனினும் இன்னும் வர்த்தமானியில் அதை ஒட்டி அறிவித்தல் வரவில்லை. அது வந்தால் மேற்படி 65 ஆயிரம் ரூபா இரு வழிக் கட்டணம் மேலும் 10 ஆயிரம் ரூபா வரைக் குறையும் வாய்ப்புள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கட்டணம் எதிர்பார்த்து அளவுக்கு அதிகம் இல்லை என்பதில் மனத் திருப்தி இருந்தாலும், இந்தச் சேவையில் பயணிகளுக்கு ஒரு சிக்கல் உண்டு.

ஒவ்வொரு பயணிக்கும் ஆக்கக்கூடியது 15 கிலோ பயணப் பொதிதான் அனுமதிக்கப்படும். அதேபோல கையில் ஐந்து கிலோவுக்கு மேற்படாத எடை கொண்ட கைப்பையையே கொண்டு செல்லலாம்.

இந்தக் கட்டுப்பாடு 'குருவிகள்' சேவைக்கு சரிப்பட்டு வராது என்பது தெளிவு.

பன்னிரண்டாம் தேதி சென்னையில் இருந்து வரும் முதல் விமானத்தை வரவேற்க கொழும்பிலிருந்து அரசின் உயர் தலைவர் ஒருவர் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே சமயத்தில் சென்னையில் இருந்து வரும் முதல் விமானத்தில், தமிழகத்தின் ஒரு முக்கிய மாநிலத் தலைவரை அழைத்து வருவது குறித்தும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன எனத் தெரிகின்றது.

எது, எப்படியோ முதலில் சேவை மீள ஆரம்பிக்க வேண்டும். பின்னர் சேவையின் ரகம், எண்ணிக்கை, விமானத்தின் அளவீடு போன்றவற்றை மேம்படுத்துவது குறித்துப் பார்க்கலாம்.

இதே போன்று காங்கேசன்துறை - காரைக்கால் படகுப் பாதைப் போக்குவரத்து குறித்தும் அவசர அவசரமாக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன - இது உற்சவகால என்பதால்.

எனினும் டிசம்பர் நடுப்பகுதி முதல் ஜனவரி நடுப் பகுதி வரை கடல் கொந்தளிப்பாக இருக்கும். அதனால், இந்தச் சேவை தைப்பொங்கலுக்கு பின்னர்தான் சாத்தியம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

விமானம் பறக்கத் தொடங்கினால் படகுப் பாதையும் விரைவில் சேவையை ஆரம்பித்து விடும் என நம்பலாம்.

- மின்னல் -

## மருந்துத் தட்டுப்பாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுதிக் கொடுக்கின்றனர். அதேவேளை வெளி மருந்தகங்களில் மருந்துகளின் விலைகள் உச்சத்தை தொட்டுள்ளன - என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

யாழ் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு தேவையான அடிப்படை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. வைத்தியசாலை தரப்பினர் இது தொடர்பில் அறிவித்திருக்கின்றனர். அதேவேளை நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எங்களுடைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயங்களில் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களினூடாகவோ இந்த புற்றுநோய் வைத்தியசாலைக்கு செல்லும் மக்களின் அவலநிலையைப் போக்குவதற்கு முயற்சி எடுத்தனர் எனத் தெரியவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு சமய நிறுவனங்களினூடாக குறித்த வைத்தியசாலைக்கு இலட்சக் கணக்கான ரூபா செலவில் மருந்துப் பொருள்களை வழங்கி வருகின்றோம்.

எனவே தயவு செய்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல் தரப்பினர் நேரடியாக குறித்த இடங்களுக்குச் சென்று அங்குள்ள விடயங்களை ஆராய்ந்து அக்கறை செலுத்த வேண்டும்.

எனவே உடனடியாக எமது மக்கள் பிரதிநிதிகள் யாழிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று அடிப்படைத் தேவையான மருந்து விவரங்களை எடுத்து, தங்களது சிறப்புரிமைகளை பயன்படுத்தி இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதரங்களின் ஊடாக உடனடியாக மருந்து உதவியை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். - எனத் தெரிவித்தார்.

அதேவேளை இந்தவிடயம் தொடர்பில் புலம்பெயர் சமூகம் உதவி செய்ய காத்திருக்கின்றனர். இது தொடர்பில் அவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் நாடாளுமன்றில் மக்கள் பிரதிநிதிகள் தற்போது பேசப்படும் விடயங்கள் பெறுமதியற்றவை. நாடாளுமன்ற உரைகளினூடாக எதனையும் பெற்றுக் கொடுக்க முடியாது. எனவே மக்கள் பிரதிநிதிகள் நோயுற்ற துன்பப்படும் மக்கள் மத்தியில் நேரில் சென்று அவர்களின் பிரச்சினைகளை கேட்கவேண்டும்.

சேலைனுக்கு கூட இன்று தட்டுப்பாடு வரவுள்ளது. இந்நிலையில் யாழ் தெல்லிப்பளை வைத்தியசாலை தரப்பினர் கூறும் போது இதுவரை வேறுவொரு மக்கள் பிரதிநிதியும் மருந்து கொண்டு வந்து தரவில்லை என்கின்றனர். அதே வேளை சைவசமய நிறுவனங்கள் தொடர்ச்சியாக வைத்தியசாலைகளுக்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

எனவே சகல மக்கள் பிரதிநிதிகளிடமும் வேண்டிக்கொள்வது என்னவென்றால் குறித்த வைத்தியசாலைகளுக்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராயுமாறு கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

## பயங்கரவாத எதிர்ப்புச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாட்டு மக்களின் அபிலாஷைக்கு முரணாக அரசாங்கம் செயற்படுவதாக குறிப்பிடுவதை ஏற்க முடியாது. போராட்டத்தின் ஊடாக மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் அரசமைப்பின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளன. நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காக நாடாளுமன்ற மட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் தேசிய சபை, துறைசார் மேற்பார்வை குழு நியமிக்கப்பட்டுள்ளது. புதிதாக மூன்று விசேட தெரிவுக் குழுக்களை அமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்புக்காக நடைமுறையில் இருந்த சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. சமூக கட்டமைப்பிற்கு வலு சேர்க்கும் வகையில் விசேட தேவையுடையவர்களுக்கான சட்டம், ஜனநாயகத்தை பாதுகாக்கும் சட்டங்கள் காலத்தின் தேவைக்கமைய திருத்தம் செய்யப்படவுள்ளன.

பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இயற்றுவதற்கான சட்டமூலம் இன்னும் இரு மாத காலத்திற்குள் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். - என தெரிவித்துள்ளார்.

# விபத்தில் இறந்த ரஷ்யப் பெண்ணின் நான்கு வயது மகள் அநாதரவானார்!





ஹபாரதுவவில் விபத்தில் கொல்லப்பட்ட ரஷ்யப் பெண்ணின் மகள் ஆதரவற்ற நிலையில் தனித்து விடப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

விபத்தில் கொல்லப்பட்ட ரஷ்யப் பெண்ணின் நான்கு வயது மகளை உடனடியாகப் பொறுப்பேற்பதற்கு யாரும் அற்ற நிலை காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் ஓட்டோ - ரயில் விபத்தில் மரணம் அடைந்த இந்த ரஷ்யப் பெண் தனது மகளுடன் உனவட்டுன பகுதியில் வசித்து வந்துள்ளார்.

குழந்தைகளை பராமரிக்கும் நிலையமொன்றில் தனது மகளை விட்டுவிட்டு சென்றவேளையே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணிற்கு இலங்கையில் உறவினர்கள் எவரும் இல்லை என்பதால் உறவினர்கள் ரஷ்யத் தூதரகம் ஊடாகத் தொடர்புகொள்ளும் வரை சிறுமி குறிப்பிட்ட குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திலேயே தங்கவைக்கப்பட்டிருப்பார் எனக் கூறப்பட்டது.

உயிரிழந்த அந்தப் பெண்ணின் இல்லத்தில் வேறு இரண்டு ரஷ்யக் குடும்பங்கள் தங்கியுள்ளன என்றும் -

குழந்தையின் தகப்பனார் ரஷ்யா-விலிருந்து நேற்று கொழும்பு வந்து சேர விருந்தார் என்றும் -

பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

## இலங்கையின் மீட்சிக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிளிங்கன் உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை நேற்று முன்தினம் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் சந்தித்த தருணத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பிளிங்கன் இந்த தகவலை வெளியிட்டார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இது தொடர்பான காணொலியை வெளியிட்டுள்ளது.

தமது சந்திப்பின் போது, உலக கால-நிலை விடயங்கள், அதில் இலங்கைக்கான திட்டங்கள் மற்றும் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக பிளிங்கன் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் கருத்துரைத்த, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்காவின் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடுகள், அதற்கான அமெரிக்காவின் ஏற்பாடுகள் குறித்தும் அமைச்சர் அலி சப்ரி இலங்கை சார்பில் நன்றியைக் கூறினார்.

## நாணய நிதியக் கடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹொரன் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையிலான ஊழியர் மட்ட இணக்கப்பாடு சிறந்த நிலையில் உள்ளதாகவும், மத்திய வங்கி முன்னெடுத்துள்ள நடவடிக்கையினால் தற்போது பொருளாதாரம் நிலையான மட்டத்தில் உள்ளதாகவும் ஹொரன் சேமசிங்க கூறியுள்ளார்.

கடன் கொடுப்பனவு மறுசீரமைப்புத் தொடர்பில் சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் இருந்து சாதகமான பதிலை எதிர்பார்ப்பதாகவும் ஹொரன் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# விசேட தேவையுடையவர்களின் நலனுக்காக புதியவேலைத்திட்டம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



விசேட தேவையுடையவர்களின் நலனுக்காக புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும். விளையாட்டு, சுகாதாரம், இளைஞர் விவகாரம் உள்ளிட்ட பல அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படும் இந்தப் புதிய வேலைத்திட்டத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நேற்று (சனிக்கிழமை) அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பல்வேறு திறன்களைக் கொண்ட விசேட தேவையுடையவர்கள் இருப்பதால், அவர்களின் படைப்புத் திறமைகளை நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காகத் திறம்பட பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

அரச நிறுவனங்களில் விசேட தேவையுடையோரின் நலன் தொடர்பில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாகக் கவனத்துக்கு கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பில் ஆராய்ந்து அந்தத் துறைகளில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தலைமைச் செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சமூக வலுப்படுத்துகை இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தலைமைச் செயலகத்தின் பணிப்பாளர் அனுராதா ஹேரத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயங்கரவாத - அரசும் சட்டமும்

சுமார் 45 வருடங்களாக நடைமுறையில் இருக்கின்ற – மிக மோசமான மனிதப் பேரவலங்களை ஏற்படுத்திய – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றி அமைப்பது பற்றி மீண்டும் வாக்குறுதி அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. மாற்றுச் சட்டம், 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற பெயரில் இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத்துக்கு வருமாம்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாத ஒழிப்பது என்ற வாக்குறுதி, இலங்கையில் பரவணியாக பின்பற்றப்படும் 'பிள்ளையார் கல்யாண' வகையறா உறுதிமொழிகளில் பிரதானமானது.

அரசமைப்பை மாற்றி அமைத்தல், தேர்தல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துதல், இனப் பிரச்சினைக்கு இணக்க தீர்வு காணுதல் என்று இலங்கையில் 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை நடக்கும், நாளை நடக்கும் என உறுதிமொழி கூறும் விடயங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது ஒழிப்பதும் ஒன்று.

நாளை நடக்கும், நாளை நடக்கும் என்று 45 ஆண்டுகள் இந்த நாட்டில் மனிதாபிமானத்தையே கேவலப்படுத்தும் விதத்தில் மிக மோசமாக – மிலேச்சத்தனமாக – படு பயங்கரமாக – முன்னெடுக்கப்பட்டது இந்தச் சட்டம்தான்.

பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம்தான் அரச பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண். அரச பயங்கரவாதத்தின் சரணாலயம்.

உண்மையாகக் குற்றம் இழைத்தவர்களை சுதந்திரமாக உலவ விட்டு விட்டு – அவர்களைக் கோட்டைவிட்டு விட்டு – அப்பாவிகளை அதற்குப் பதிலாக சட்டத்தினாலும் தடுப்புக் காவலினாலும் சாகடிப்பதற்கு என்று உருவான சட்டமே இது.

இந்தச் சட்டத்தினால் அரச புலனாய்வுத் துறையின் திறமையே மங்கிக் குன்றி அழிந்து போய் விட்டது என்பதே உண்மை. பாதுகாப்பு அதிகாரிகள் கையில் அகப்பட்ட அப்பாவிகளைக் கூட பிழையாக மாட்டி, குற்றங்களை அவர்கள் மேல் தங்கு தடையின்றி சுமத்தி விட்டு, நழுவிச் செல்வதற்கு வாய்ப்பு வசதியும் தவறான உத்வேகமும் அளித்ததே இந்த கேவலங்கெட்ட சட்டம்தான்.

மனித நாகரிகங்களுக்கும், மனித குல மாண்புகளுக்கும், சட்ட, நீதி முறைமையின் தனித்துவச் சிறப்புகளுக்கும் மாறான கொடூர அங்கங்களை கொண்டிருந்த இந்தச் சட்டம், மனித வாழ்வியலுக்கு ஒவ்வாதது, மிருகத்தனமானது என்று சர்வதேசமே மிகக் கேவலமாக விமர்சித்த பின்னரும் கூட, இலங்கையின் பௌத்த – சிங்களப் பேரினவாத அரசு, பௌத்தத்தின் பஞ்சசீல மாண்பின் பெயரில் 45 ஆண்டுகளாக அதைத் தொடர்ந்து சிறுபான்மையினரான தனது 'எதிரிகளுக்கு' எதிராக ஏவி விட்டது.

அதுவே இங்கு நடந்தது.

சர்வதேச எதிர்ப்பு வலுத்து விட்டமையால், பொருளாதார மீட்சிக்கு சர்வதேசத்தின் பிச்சையை எதிர்பார்த்து இருக்கும் இலங்கை, வேறு வழியின்றி இவ்விடயத்தில் இறங்கி வருகின்றது.

இதுவரை அந்த கொடூர – குரூர – சட்டத்தில் தங்கி நின்றது இலங்கை அரசுக்கு வரலாற்று கேவலம்.

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரின் நடத்தை மிகவும் அநாகரிகமானது!

## சபாநாயகர் சுட்டிக்காட்டு



எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரின் நடத்தை மிகவும் அநாகரிகமானது எனவும் அவர்கள் வீண் பேச்சுக்களால் சபையின் பெறுமதியான நேரம் வீணடிக்கப்படுவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குற்றம்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் நடந்து கொள்ளும் விதம் மிகவும் அவமரியாதையாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் மேலும் தெரிவித்த அவர், சிலர் எழுந்து நின்று பேச வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் அதை நிறுத்த முயற்சிக்கவில்லை. மிகவும் வருத்தமாக உள்ளது. அணியை நிர்வகிப்பது எனது பொறுப்பு அல்ல, அது உங்களுடையது. – எனத் தெரிவித்தார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது தொடர்பாக இலங்கை மக்களிடம் கணக்கெடுப்பு!

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பில் இலங்கையின் 60.5 வீத மக்கள் தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர் என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஒக்ரோபர் 21 முதல் 31 வரை, மாற்றுக்கொள்கை மையம் உள்ளிட்ட பல அரச சாரா நிறுவனங்கள் 25 மாவட்டங்களில் ஆயிரம் பேரின் மாதிரியைப் பயன்படுத்தி இது தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பில், 60.5 வீதம் பேர் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது தொடர்பாகத் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.


மேலும் தங்கள் சம்மதத்தை வெளிப்படுத்தியவர்களில் பெரும்பாலானோர் 18 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 24 வீதம் பேர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறக்கூடாது என்று கூறியுள்ளனர்.

இதற்கிடையில், 56.8 சதவீதம் பேர் வாய்ப்பு கிடைத்தால் வெளிநாடு செல்ல அல்லது வேறு நாட்டில் வாழ தயாராக இருக்கின்றனர் என அறிவித்துள்ளனர். 18 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களில் 77.2 வீதம் பேரும் 30 வயதுக்கு மேற் பட்டவர்களில் 45.4 வீதம் பேரும் வெளிநாடு செல்லத் தயாராக இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

# அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த அரசாங்கம் பேச்சுகளை மேற்கொண்டுள்ளதா?

## அத்துரலியே ரத்ன தேரர் கேள்வி



நாட்டின் தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தும் மக்களாணை தற்போதைய அரசாங்கத்துக்கு, விசேடமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கிடையாது. இலங்கை ரெலிகொம் உட்பட அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வெளிநாட்டு நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச்சு மேற்கொண்டுள்ளதா என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் சபையில் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளை 27 இன் 2 கீழ் விசேட பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தேசிய வளங்களை முழுமையாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் தான்தோன்றித்தனமான முறையில் அந்த தீர்மானங்களை செயற்படுத்த அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய இலங்கை ரெலிகொம் நிறுவனம் இலாபமடையும் நிறுவனமாக காணப்படும் நிலையில் அதனை தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்ய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கும் போது நாட்டின் இறையாண்மை தேசிய பாதுகாப்பிற்கும்,பொது மக்களுக்கான நலன்புரி திட்டங்களுக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும்.

இலங்கை மின்சார சபை நட்டமடையும் அரச நிறுவனம் என்பதை அனைவரும் அறிவோம்.மின்சார சபையின் நட்டம் முகாமைத்துவம் செய்து இலாபமடையும் நிலைக்கு கொண்டு செல்லும் தேசிய கொள்கைத் திட்டம் ஏதும் இதுவரை வகுக்கப்படவில்லை. மக்கள் பிரதிநிகள் நாட்டின் அரசமைப்பு அல்ல.

நாட்டின் சுயாதீன தன்மை எவ்வாறு காணப்படும் என்பது நாட்டின் வலுசக்தி துறையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

நாட்டின் வலுசக்தி துறையை ஒரு தரப்பினர் தன்வசப்படுத்திக் கொள்வது அரசமைப்புக்கு முரணானது. வலுசக்தி துறைமை தனியார் மயப்படுத்தும் மக்களாணை தற்போதைய அரசாங்கத்துக்கு விசேடமாக ஜனாதிபதிக்குக் கிடையாது.

வலுசக்தி துறை எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் கொள்கை ரீதியில் நீண்ட காலத் திட்டங்களை வகுக்க வேண்டும். அதனை விடுத்து தேசிய வளங்களை விற்பது, தொடர்ந்து கடன் பெறுவது ஒரு தீர்வாக அமையாது.

இலங்கை ரெலிகொம் நிறுவனத்தை விற்பதற்கு வெளிநாட்டு நிறுவனத்துடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளதா? , இலங்கை மின்சார சபை மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் பேச்சுகளை முன்னெடுத்துள்ளதா? இந்த கேள்விகளை தேசிய பிரச்சினையாகக் கருதி பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். – என்றார்.

# ஐ.தே.கவின் புதிய தொகுதிஅமைப்பாளர் தெரிவுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்தன!



## என்கிறார் பாலித ரங்கே பண்டார

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர் தெரிவுக்கான நேர்காணலுக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி, இது தொடர்பான நேர்காணல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பல நேர்காணல் குழுக்களின் ஊடாக இது தொடர்பான தெரிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்காக, கட்சியின் சில முன்னாள் ஆசன அமைப்பாளர்கள் வெளியேறியமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நேர்காணல் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய தொகுதி அமைப்பாளர்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் ஓராண்டு காலத்துக்குப் பதவியில் இருப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நேர்காணல்களில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் பாலிதரங்கே பண்டார, தேர்தலுக்கு தயாராகி வரும் நிலையில், கட்சியில் இருந்து விலகியவர்கள் தொடர்பில் தாம் வருத்தமடைகிறேன் எனத் தெரிவித்தார்.








கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜி 20 நாடுகள் தலைமைத்துவப் பதவியை பெருமையோடு பொறுப்பேற்றது இந்தியா

## ஒரு வருட காலத்துக்கு பல்வேறு நிகழ்வுகள் விரிவான ஒழுங்குகளுடன் திட்டங்கள் தயார்

கடந்த வியாழனன்று இந்தியா முறையாக ஜி 20 நாடுகளின் தலைமைத்துவப் பதவியை ஏற்றுக்கொண்ட நிலையில், ஜி 20 நாடுகள் அமைப்பை பொதுமக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்வதும், அதை உண்மையிலேயே மக்களின் ஜி 20 ஆக மாற்றுவதும் அதன் முக்கிய இலக்கு என்று வெளியுறவு அமைச்சகம் கூறியது.

இது ஒரு மறக்கமுடியாத நாள். நாங்கள் இன்று தலைமைத்துவப் பதவியை முறையாக ஏற்றுக்கொண்டோம். எங்கள் தலைமைத்துவப் பதவியின் முக்கிய அம்சம் இவ்வாண்டு முழுவதிலும் ஜி 20 ஐ பொதுமக்களிடம் நெருக்கமாக கொண்டு செல்வது மற்றும் எங்கள் தலைமைத்துவப் பதவியை உண்மையான மக்கள் ஜி 20 ஆக மாற்ற முயற்சிப்பதும்தான்என வெளிவிவகார அமைச்சின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி வழக்கமான செய்தியாளர்களின் போது கூறினார்.

ஜி 20 தலைமைத்துவப் பதவியின் கீழ் பல நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன எனவும் அவற்றில் சில ஏற்கனவே நடந்துள்ளன எனவும் அவர் மேலும் கூறினார். முன்னதாக, நாடு முழுவதும் உள்ள 75 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைக்கும் ஒரு பல்கலைக்கழக நிகழ்வு நடைபெற்றது.

இன்று நாம் தலைமைத்துவப் பதவியேற்கும் முதல் நாள் என்பதால், இதனைக் குறிக்கும் வகையில் பல நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றில் சில ஏற்கனவே நடந்தேறிவிட்டன. உங்களுக்குத் தெரியும், முந்தைய நாளில் நாங்கள் ஒரு பல்கலைக்கழக இணைப்பு நிகழ்வை நடத்தினோம். நாடு முழுவதிலுமிருந்து 75 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாக இணைந்தனர் என பாக்சி கூறினார்.

ஜி 20 நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கான எங்கள் முயற்சிகளில் மாணவர்களின் நலன்கள் எங்களுக்கு நன்றாக உதவுகின்றன என்று அவர் கூறினார். பல்வேறு பள்ளிகளில் நடைபெறும் சிறப்பு ஜி 20 அமர்வுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்துகிறோம்.

பிரதம மந்திரியின் முதன்மைச் செயலாளருடன் வெளியுறவுத்துறை அமைச்சரும் சிறப்புரையாற்றினர். மாணவர்களின் நலன்கள் இளைஞர்களை G20 நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கான எங்கள் முயற்சிகளுக்கு நன்மதிப்பைக் கொடுக்கிறது. நாங்கள் பல்வேறு பள்ளிகளில் சிறப்பு ஜி 20 அமர்வுகள் மூலம் பள்ளி மாணவர்களையும் ஈடுபடுத்துகிறோம். இந்த மக்கள் பங்கேற்பு கருத்தை மேலும் எடுத்துக்கொண்டு, இன்று



கோஹிமாவில் நடைபெறும் ஹார்ன்பில் திருவிழா ஜி 20 இல் சிறப்பு கவனம் செலுத்துகிறது. நாங்கள் செல்லும்போது மற்ற விழாக்களிலும் அதைச் செய்ய முயற்சிப்போம் என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறினார்.

இந்த மக்கள் பங்கேற்பு கருத்தை மேலும் எடுத்துச் செல்வது. கோஹிமாவில் நடைபெறும் ஹார்ன்பில் திருவிழா ஜி 20 இல் சிறப்பு கவனம் செலுத்துகிறது. சில யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள் உட்பட 100 நினைவுச்சின்னங்கள் இன்று சிறப்பாக ஒளிர்கின்றன. மேலும் குடிமக்கள் செல்ஃபி பிரச்சாரத்தில் சேர அழைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

செய்தியாளர் சந்திப்பின் போது, வெளிவிவகார அமைச்சின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்ஸிலின் தலைமைப் பொறுப்பை இந்தியா இன்று டிசம்பர் மாதம் ஏற்றுக் கொண்டது என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இந்தியா இரண்டு வருட பதவிக்காலத்தில் இரண்டாவது முறையாகத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்கிறது என்றும் தெரிவித்தார். .

குறிப்பிடத்தக்க வகையில், ஜி 20 உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதம், சர்வதேச வர்த்தகத்தில் 75 சதவீதம் மற்றும் உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உலகின் அனைத்து 20 முக்கிய பொருளாதாரங்களையும் ஒன்றிணைக்கிறது. கூடுதலாக, குழுவில் பங்கேற்பாளர்களில் ஐ.நா., உலக வர்த்தக நிறுவனம், உலக சுகாதார ஸ்தாபனம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச தொழிலாளர் சம்மேளனம், ஆசியான், ஆபிரிக்க ஒன்றியம், சர்வதேச சோலார் (சூரியவலு) கூட்டணி, பேரிடர் தாங்கல் உள்கட்டமைப்புக்கான (சர்வதேச) கூட்டமைப்புபோன்ற முக்கிய சர்வதேச அமைப்புகளும் அடங்கும்.

ஜி 20 தலைமைத்துவத்தின் போது, இந்தியா முழுவதும் பல இடங்களில் 32 வெவ்வேறு துறைகளில் சுமார் 200 கூட்டங்களை இந்தியா நடத்தும். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி – 20 உச்சி மாநாடு, இந்தியாவால் நடத்தப்படும் மிக உயர்ந்த சர்வதேசக் கூட்டங்களில் ஒன்றாக இருக்கும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான ஜி 20 தலைமைப் பதவியை இந்தியா இந்தோனேசியாவிடம் இருந்து பெற்றுக்கொண்டதால், அனைத்துக் கண்களும் இந்தியாவின் மீது பதிவாகியுள்ளன, ஏனெனில் உலக தெற்கு மற்றும் முன்னேறியநாடுகளுக்கு இடையேசிறந்த ஒத்துழைப்பின் சூழலை உருவாக்கும் நிகழ்ச்சி நிரலை புது டெல்லி அமைக்கும் என்பது இருதரப்பினதும் நம்பிக்கை.

உலகளாவிய அமைதி மற்றும் செழிப்பு மற்றும் வளர்ந்துவரும்உலகளாவியசவால்களைஎதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கான நிலையான மற்றும் சமமான வளர்ச்சிக்கான ஒத்துழைப்பாக இந்த நிகழ்ச்சி நிரல் இருக்கும்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# உலகில் மிகவும் வலுவான ஜனநாயகம் இந்தியாதான்

## ஐ.நா. பிரதிநிதி தெரிவிப்பு




நியூயோர்க், டிசெ.04

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் 2021 மற்றும் 2022 ஆகிய 2 ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இந்தியா செயல்பட்டு வருகின்ற நிலையில், மாதந்தோறும் பாதுகாப்பு கவுன்ஸிலின் தலைமைப் பொறுப்பை ஒவ்வொரு நாடும் சுழற்சி முறையில் வகித்து வருகின்றன. கடந்த ஆண்டு ஆவணி மாதம் இந்தியா தலைவராக இருந்தது.

இந்த நிலையில், நடப்பு டிசம்பர் மாதத்துக்கு இந்தியா மீண்டும் தலைவர் ஆகியுள்ளமையுடன், நேற்று முன்தினம் தலைமைப் பொறுப்பை ஏற்றது. ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருச்சிரா காம்போஜ், தலைவர் இருக்கையில் அமர்ந்தார்.

இதனையொட்டி நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ருச்சிரா காம்போஜிடம் இந்தியாவின் ஜனநாயகம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த காம்போஜ், ஜனநாயகத்தில் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை. இந்தியா பழம்பெருமை வாய்ந்த தேசம். இந்திய ஜனநாயகத்தின் வேர்கள் 2,500 ஆண்டுகளுக்கு முந்தையது. நாங்கள் எப்போதுமே ஜனநாயகமாகத்தான் இருந்துள்ளோம். அண்மைக் காலத்தை எடுத்துக் கொண்டாலும் ஜனநாயகத்தின் 4 தூண்களும் வலுவாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல எங்கள் நாட்டில் சமூக வலைதளம் கூட சுதந்திரமாக இருக்கிறது. அதனால் இந்தியாதான் உலகிலேயே வலுவான ஜனநாயகம். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாங்கள் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவை நடத்துகிறோம். எங்கள் நாட்டில் யார் வேண்டுமானாலும் அவர்கள் மன தில் இருப்பதைச் சொல்லும் உரிமை இருக்கின்றது. நாங்கள் தொடர்ச்சியாக மாற்றங்கள், ஏற்றங்களைக் கண்டு வருகிறோம். எங்கள் முன்னேற்றம் மிகவும் சிறப்பாக உள்ளது என்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் ருச்சிரா காம்போஜ் தெரிவித்துள்ளார்.

## ஜி20 தலைமைப் பொறுப்பேற்ற

# இந்தியாவுக்கும் மோடிக்கும் பைடன் ஆதரவு தெரிவிப்பு!

வொஷிங்டன், டிசெ.04

இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் முடிவில் ஜி20 அமைப்பிற்கு, இந்த ஆண்டு இந்தியா தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ளது. இதற்கான மாநாட்டையும் இந்தியா அடுத்த ஆண்டு தலைமை ஏற்று நடத்தவுள்ளது. இந்தப் பொறுப்பு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியாவுக்கு அமெரிக்கா தனது ஆதரவை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அதிபர் ஜோ பைடன் கூறுகையில், இந்தியா, அமெரிக்காவின் வலுவான நட்புறவு நாடு. பருவநிலை மாற்றம், எரிசக்தி, உணவு நெருக்கடி ஆகிய சவால்களை எதிர்கொள்ளும்இவ்வேளையில் ஜி20 அமைப்பிற்கு தலைமை பொறுப்பேற்க



உள்ள இந்தியாவிற்கும், எனது நண்பர் பிரதமர் மோடிக்கும் எனது ஆதரவை அளிக்க ஆவலுடன் காத்திருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல்வாதிகளின் காலில் விழும் நிலைமையில் கல்வி அதிகாரிகள்!

## கோவிந்தன் கருணகரன் எம்.பி. காட்டம்




வடக்கு கிழக்கில் உள்ள கல்வி திணைக்களங்களின் செயற்பாடுகள் அரசாங்க சார்பு அரசியல்வாதிகளைத் திருப்திப் படுத்துவதற்காக மட்டும் உள்ளதே ஒளிய மாணவர் நலனோ, கல்வி அபிவிருத்தி நலனோ இல்லை. பதவியிலிருப்பவர் அடுத்த பதவியுயர்வை எடுப்பதற்காக அந்த அரசியல்வாதியின் காலடியில் விழும் நிலையில் இருந்தால் எமது நாட்டின் கல்வியின் நிலை எப்படி உயரும்? எனநாடாளுமன்றஉறுப்பினர்கோவிந்தன் கருணாகரம் (ஜனா) கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்றகல்வி அமைச்சு, மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் –

இன்று வடக்கு கிழக்கில் கல்வித் திணைக்களங்களின் செயற்பாடுகள் எம்மால் திருப்திப்படக்கூடிய வகையில் இல்லை. இவை வடக்கு கிழக்கு வாழ் அரசாங்க சார்பு அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மட்டும்உள்ளதே ஒளிய, மாணவர் நலனோ, கல்வி அபிவிருத்தி நலனோ இல்லை. பதவியிலிருப்பவர் அடுத்த பதவியுயர்வை எடுப்பதற்காக அந்த அரசியல்வாதியின் காலடியில் விழும்நிலையில் இருந்தால் எமது நாட்டின் கல்வியின் நிலை எப்படி உயரும்? எப்படியொரு கல்வியால் உயர்ந்த ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்? உண்மையிலேயே எனது மாகாணத்தில் கல்வித் துறை சார் நிர்வாகம் தொடர்பாக நடைபெறுகின்ற சீர்கேடுகளை இந்த உயரிய சபையில் எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பமாக இதனை நான் கருதுகின்றேன்.

இது எவர் மீதும் கொண்ட காழ்ப்புணர்ச்சியோ, தனிப்பட்ட குரோதமோ அல்ல. எமது மக்களின் பிரதிநிதி என்ற வகையில் எனக்கு இருக்கின்ற தார்மீகப் பொறுப்பின் வெளிப்பாடே இதுவாகும்.

அரச பல்கலைக்கழகங்களில் திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியை அதிகரித்தல் என்ற நிதியமைச்சரின் முன்மொழிவை நான் வரவேற்கின்றேன். ஏனெனில், இந்த நாடு இனப்பிரச்சினை என்ற பெயரில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி தம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான முதல் காரணியே அரச பல்கலைக்கழக அனுமதியில் திறமையைப் புறக்கணித்து மாவட்ட விகிதாசாரக் கோட்டாவைக் கொண்டு வந்ததேயாகும். இதனை, இதன் உண்மைத் தன்மையின் தாற்பரியத்தை எமது ஜனாதிபதியவர்கள் உணர்ந்துள்ளமைமையை வரவேற்கின்றேன்.

இலங்கையில் தேசிய கல்வி நிறுவகம் கடந்த முப்பது வருடங்களாக இயங்குகின்றது. 1985ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க சட்டத்தின்படி இலங்கையிலுள்ள ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும் அவர்களுக்குத் தொழில் அங்கீகாரச் சான்றிதழ்களை வழங்கவும் தேசிய கல்வி நிறுவகத்துக்குத் தான் அதிகாரம் இருக்கின்றது. தற்போது அந்தத் தேசிய கல்வி நிறுவகங்களை பல்கலைக்கழகம் ஆக்குவதற்கான யோசனை எழுந்துள்ளது.

இந்தியா, மலேசியா, அமெரிக்காவில் இருப்பதைப் போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஒரு தேசிய கல்விப் பல்கலைக்கழகமாக மாற்றலாம். இங்கு 24 கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்தவர்களும், பாரிய கட்டட மற்றும் இதர வசதிகளும் இருப்பதால் இலகுவாக இதனை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

அதேபோல் பத்தொன்பது தேசிய கல்வியியற் கல்லூரிகளையும் இணைத்து அதனையும் உங்கள் யோசனையின் படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கீழ் ஒரு பல்கலைக்கழகமாக மாற்றலாம். ஆனால் 2019, 2020 களிலே தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்குத் தெரிவான மாணவர்களிலும் பார்க்க இவ்வருடம் இரட்டிப்பான மாணவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிய வருகின்றது. ஓர் ஆசிரிய மாணவனுக்கு ஒரு மாதத்துக்குத் தற்போது ஐயாயிரம் ரூபா தான் ஒதுக்கப்படுகின்றது.

தற்போதைய பொருளாதாரச் சூழலிலே ஒருநாளைக்கு 160 ரூபாக்களே கிடைக்கின்றன. இதிலேயே அவர்களின் ஒரு நாளைக்கான மூன்றுவேளை சாப்பாடு உட்பட இதர செலவுகளும் அடங்குகின்றன. எனவே இந்த ஐயாயிரம் ரூபா விடயத்தில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அந்த ஆசிரியர்கள் போசாக்கான ஆசிரியர்களாக வெளிவந்து கற்பிப்பதற்காக ஆவன செய்ய வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்க கோரிக்கை வேண்டும்!

## தமிழ்க் கட்சிகளிடம் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு இந்த ஆட்சியாளர்களிடம் ஓர் ஒற்றுமையான நிலைப்பாடு இல்லை. அதேநேரம் தமிழ் மக்களுடைய நீண்ட நாள் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாகவும் இந்த நாட்டில் ஓர் அமைதியான நிலையை உருவாக்குவதற்கும் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியிலும், எதிர்க்கட்சி தரப்பிலும் ஓர் உறுதியான நிலைப்பாடு இல்லை என முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனப் பிரச்சினைக்கு மாவட்ட சபைகளை தீர்வாக முன்வைக்கலாம் என நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். அதற்கு சற்று வித்தியாசமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாவட்ட அபிவிருத்தி குழுக்களை அமைக்கலாம் என கூறியுள்ளார். உண்மையிலேயே இந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட சபை அமையாது.

தற்போது இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நெருக்கடிகளையும் உள்நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டு தமிழர் தரப்பினரை ஒரு பேச்சுக்காக அழைத்துக்கொண்டுள்ளார்.

இந்நேரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு சரியான தீர்க்கமான முடிவை முன்வைக்க வேண்டும். அதாவது வடக்கு கிழக்கு இணைந்த, சமஷ்டி அடிப்படையிலான தீர்வின் அடிப்படையில் பேசுவதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணிலுக்கு கோரிக்கையை முன்வைக்க வேண்டும். ஏனென்றால் அவர் தொடர்ந்து பேச்சுக்கு அழைப்பதன் காரணமாக இவ்வாறான ஒரு கோரிக்கையை முன்வைக்க வேண்டும். நாங்கள் பல தடவைகள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். இவ்வாறான பல பேச்சுகள், வட்ட மேசை மாநாடுகள், ஒப்பந்தங்கள் மற்றும் சந்திப்புக்களுக்கு மாக சென்று நாங்கள் பல ஏமாற்றங்களை சந்தித்திருக்கின்றோம். இது எமக்கு பாரியதொரு கற்றுக்கொண்ட பாடமாக இருக்கிறது.

இந்த நேரம் சர்வதேச ரீதியான அழுத்தங்களும், சர்வதேசத்தினுடைய தேவைகளும் இங்கு நிறைவேற்றப்படுவதற்கு காத்திருக்கின்றபடியால், நாங்கள் இவ்வளவு நாள்களும் பட்ட கஷ்டத்தை தீர்க்கக்கூடிய சக்தியாக இருப்பது இந்தியா மட்டும்தான்.

அதாவது இந்த பிராந்திய வல்லரசாக இருக்கின்ற இந்தியாவிற்கு தமிழ் தேசியம் பேசுகின்ற அத்தனை கட்சிகளும் ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒற்றுமையாக ஒரு கோரிக்கையை முன்வைக்க வேண்டும். நாங்கள் வடக்கு கிழக்கு இணைந்த தீர்விற்கு தயாராக இருக்கிறோம், நீங்கள் அதற்கு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைக்க வேண்டும். – என்றார்.

# மீனவர்களுக்கு மின்சார படகு அறிமுகப்படுத்த நடவடிக்கை!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கடற்றொழிலாளர்களுக்கு, மின்சாரத்தில் இயங்கக் கூடிய மோட்டார் படகுகளை அடுத்த வருடம்முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் சிறிய அளவில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு பற்றரியில் இயங்கக்கூடிய, மின்சார மோட்டார் படகை அறிமுகப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இவை 100 கிலோமீற்றர் தூரம் பயணிக்கக் கூடியவை. இதற்காக நாளொன்றுக்கு 86 ரூபா மாத்திரமே செலவு ஏற்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், மண்ணெண்ணெய் மற்றும் டீசலைப் பயன்படுத்தி இயங்கும் படகுகளில் சூரியப்படலங்கள் மற்றும் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு விசேட நடமாடும் சேவையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருவதாக இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்ததுடன், இதன் மூலம் மீனவர்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பம்!




திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷ நிறுவனம் தெரிவித்துள்ளது. தகுந்த சோளம் கிடைத்தமையால் திரிபோஷா உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனத்தால் நாளாந்தம் 60 ஆயிரம் திரிபோஷா பக்கெற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தாய்மார்களுக்கான திரிபோஷா பொருள்கள் உற்பத்தி தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் மழையின்மையால் உழுந்துசெய்கையாளர்கள்பாதிப்பு!

வவுனியாவில் கடந்த 20 நாள்களாக மழை இன்மையால் உழுந்து செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 500 ஹெக்டேயருக்கும் அதிகமாக உழுந்துசெய்கைமேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மழையின்மை விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது.

கடந்த காலங்களில் 4,000 ரூபாவுக்கு உழவு பணம் கொடுத்து 400 முதல் 500 ரூபாவுக்கு விதை உழுந்து பெறக்கூடிய நிலை காணப்பட்ட போதிலும் தற்போது 15,000 ரூபா உழவுப்பணமாகவும் 1,100 முதல் 1,200 வரை விதை உழுந்து கொள்வனவு செய்தே செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page 1 English for all Sunday the 04th of December 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com


# Tuning Up

Do you enjoy listening to music? Do you wonder what it would be like to be a musician? Musicians work very hard, but they love what they do. They do not mind the work because they love creating music. Most musicians start taking lessons when they are little. They spend many years learning to play. They practice as much as they can, and when they are ready, they get jobs in music. There are various kinds of musicians who play many different instruments. Some play in bands, and some play in orchestras. Some work in music studios, and some give music lessons. But they all love music. Musicians practice every day. They want their music to sound its best. Even the best musicians have to practice. That is how they keep playing well.

**1. Which statement is true?**

A. Musicians do not take many lessons.
B. Musicians work hard because they love music.
C. Musicians do not practice very much.
D. Musicians only play in orchestras.



**2. Why do musicians practice every day?**

A. They get jobs in music.
B. There are many kinds of musicians.
C. They work hard.
D. They want their music to sound its best.

**3. Which has the same root word as musician?**

A. sick B. must
C. musical D. physician

**4. What is an orchestra?**

A. a school B. a restaurant
C. a musical group D. a store

**5. What does it mean if you do not mind something?**

A. You don't care.
B. You aren't bothered by something.
C. You care too much.
D. You don't take care of yourself.



Some musicians play in orchestras. Orchestras are special musical groups. They are led by conductors. Conductors have many jobs. One job is to lead the musicians when they practice. Conductors also lead the orchestra during concerts. It is important that everyone play as a team. Conductors are in charge of making sure that happens. So they have to be good musicians. They also have to be very good leaders. Conductors have to know a lot about music, too. They choose the music for the orchestra. They have to know what people want to hear. They have to know what the musicians can play. Musicians who want to be conductors take classes. They work with other conductors. They practice. They start with small orchestras. Then, they are ready for big ones. Some conductors get to be very famous.

**1. What is this text mostly about?**

A. going to a concert B. the parts of an orchestra
C. how to play music D. what conductors do

**2. What is not something a conductor does?**

A. sell tickets B. choose music
C. lead concerts D. lead practices

**3. Which definition of the word lead is used in the text?**

A. main B. guide
C. top D. starring role

**4. Which of these is a prepositional phrase?**

A. one job is B. other conductors
C. good musicians D. during concerts

**5. What else is a special group with members who have to work together?**

A. a class B. a soccer team
C. a family D. all of the above

Orchestras have been around for a long time. They began in Ancient Egypt. Ancient Egyptian instruments were different from the ones you know. But people still played music. They liked listening to music. In the 16th century, people began to write a new kind of music. It was meant for a group of instruments. The new music sounded better when a group played it. That was when the orchestra as we know it was born. Today, there are many kinds of orchestras. Some are large, and some are small. Some play mostly traditional music. They use classical instruments. Others use modern instruments, such as electric guitars. There are many kinds of orchestras. But they all make wonderful music.

**1. Which would be a good title for this paragraph?**

A. Life in the 16th Century
B. Music in Ancient Egypt
C. The Story of the Orchestra
D. How to Play the Electric Guitar

**2. Which happened first?**

A. There were orchestras in Ancient Egypt.
B. Some orchestras use electric guitars.
C. People began to write music for a group of instruments.
D. Today, there are many kinds of orchestras.

**3. Choose the dependent clause in the following sentence: In the 16th century, people began to write a new kind of music.**

A. people began to write a new kind of music
B. in the 16th century
C. a new kind of music
D. people began to write



**4. Which is the antonym of modern?**

A. recent B. expensive
C. difficult D. ancient

**5. Which example of onomatopoeia would fit with this text?**

A. the loud drums
B. the guitar's amplifier
C. the talented musician
D. the honk of the horns

" TO BE PREPARED FOR WAR IS ONE OF THE BEST MEANS OF PRESERVING PEACE" - GEORGE WASHINGTON

# Tuning Up



An orchestra is like a team. All of the musicians have to work together and help one another. All of the musicians have to listen carefully to the other musicians. They all have to play the right thing at the right time for the music to sound its best. So, orchestra musicians have to work as a team.

There are different kinds of orchestras. But many orchestras have four sections. That is because there are four major families of instruments. The instruments in each family are similar to one another. One family is the strings. Stringed instruments make music when you move their strings. A violin is a string instrument. So is a harp. Another family is the brass family. Instruments in this family are made of brass. They can get very loud! A tuba is a brass instrument, and so is a trumpet. Instruments in the woodwind family make music when you blow into them. A flute is a woodwind instrument. So is a clarinet. Finally, there is the percussion (per-KUHSH-uhn) family. These instruments make music when you hit, shake, or scrape them. Drums are percussion instruments. So are tambourines. Each family has its own section of the orchestra.

Orchestra musicians sit in a semicircle. This is so that they can see the conductor. The conductor leads the orchestra. He or she uses special arm and hand signals to tell the musicians when to play and what to play. So, everyone has to be able to see what the conductor is doing.

Some orchestras have their own concerts. Others play the music you hear in movies. Others play the music you hear at the ballet. Some play the music you hear at plays. But they all work very hard. They want to make their music sound wonderful.

**1. What does the photograph tell the reader about this text?**

A. It is about math.
B. It is about science.
C. It is about music.
D. It is about cooking.

**2. What might happen if the musicians could not see the conductor?**

A. They would watch what the conductor was doing.
B. They would be able to hear the conductor.
C. They would not play the right thing at the right time.
D. They would work very hard.

**3. What was the author's purpose for writing this text?**

A. to tell about orchestras
B. to get you to play an instrument
C. to tell about the history of music
D. to tell how to buy an instrument

**4. To which family of instruments does the flute belong?**

A. woodwind B. percussion
C. brass D. string

**5. Why do orchestra members have to work as a team?**

A. They cannot see the conductor.
B. They cannot hear one another.
C. Some orchestras play the music you hear in movies.
D. They all have to play the right thing at the right time.

**6. What is likely true about orchestra musicians?**

A. They do not work very hard.
B. They practice a lot.
C. They do not watch the conductor.
D. They do not like music.

**7. What is an important quality of a person who plays in an orchestra?**

A. obedience B. strength
C. cooperation D. kindness

**8. What can people learn from an orchestra?**

A. Too much practice is not realistic.
B. A conductor deserves all the praise for working the hardest.
C. Teamwork is required to make big things happen.
D. Competition makes each group perform better.

# The Multiverses

The hurricane was arriving. The trees swayed in the howling winds. Dark clouds were filling the sky. Dick crawled into the basement. " The hurricane has made… its way… to Odgentown city,"the radio crackled. Within seconds, the basement started to shake vigorously. "How naughty! Next time I will kill you…" Dick muttered.

All of a sudden, the floor beneath him crumbled and broke. "Aah!" Dick screamed. He landed on a cliff of Mount Everest. Suddenly, an avalanche came towards him, like it wanted to engulf him. Dick quickly jumped off the cliff.

He landed on the ocean water. Some eerie noise did he hear. He turned around to see a tsunami, hurtling towards him. "Tsunami!" he shouted as everyone frantically ran inland. He too, ran for his life. He reached the nearest building and climbed the stairs. After climbing to the highest floor, he wondered why no one chose that same building he chose. The tsunami crashed into the building and it collapsed. Helpless with the lack of hope left to survive, Dick leapt out, closing his eyes to brace for impact.


Dick landed in an open field with a thud. It looked light green with the sun shining brightly. All of a sudden, a tremor, so powerful struck that Dick toppled over. He figured that this was the first tremor of a massive earthquake. He immediately rushed to that ladder nearby but the crack that had formed under the ladder widened and it fell in, with Dick, despite his efforts to escape that were put in vain.

He found himself in America, beside Yellowstone volcano. It started rumbling, so he ran away. When he looked back to see what was going on and saw that it was spewing out ash and lava. Dick ran through the trees and on the mud. Finally, he reached an abandoned car that was still working. He poked a stick in turned the ignition to drive away. Once he was a few miles away, Dick came out to see a rock crash to the ground in front of him.

Suddenly, he fell back into the basement. He crawled out, thinking of his near-death adventure. His imagination ran wild. Could that all be done by the hurricane? He thought. Dick did not enter the basement for he did not want to revisit those hazardous places again.

*By:A. Nithun*

# A Newly Discovered Inscription Relating to Magha's Invasion



Dr.K. Indrapala –


An important rock inscription in the jungles of Gomarankadawela, in the Trincomalee District, was recently brought to light by a team led by Prof. P. Pushparatnam (Jaffna University). Inscribed in Tamil, with some lines in Sanskrit, the record relates to some grants made to a temple in the area, the ruins of which are lying near this epigraph. The record was inscribed by a person named Sri Kulottunga Chola Kalingarayan. It is stated here that he conquered Ila-mandalam alias Mummudi-Chola-mandalam (a name given earlier by the Cholas for Sri Lanka) and conducted the consecration (virabhisheka) of Gangaraja Kalinga VijayabahuDevar. It is this information that makes the record an important historical document.

### *Gangaraja*

Who is Gangaraja Kalinga VijayabahuDevar? Gangaraja is a name that was used by princes in various parts of India (and even Southeast Asia), claiming to belong to the Gangavamsa, from very early times. Early in the fifth century CE, the son of Bhadravarman I, king of Champa in Vietnam, had the name Gangaraja. In medieval times, princes and chiefs in Karnataka as well as Kalinga (Odisha) had this name (for example, a Hoysala king in the twelfth century and a Nayakkar chief of Ummathuru in the sixteenth century). Members of the Gangavamsa who ruled in eastern India (modern Odisha) are known as the Eastern Gangas. Many of the princes and princesses about whom we hear in the political history of Sri Lanka late in the twelfth century and early in the thirteenth century claimed to belong to the Gangavamsa (one of NissankaMalla's queens is referred to as GangavamsaKalyana Mahadevi in inscriptions). The name Gangaraja in the newly discovered inscription indicates that Kalinga VijayabahuDevar who bears this title belonged to the Gangavamsa.

### *KālingaVijayabāhu*

Who is Kalinga VijayabahuDevar? The Kalinga princes who ruled from Polonnaruva after the death Parakramabahu I also adopted names ending in -bahu, like their Sinhalese predecessors. NissankaMalla had the name Parakramabahu, and two of his successors had the names Virabahu and Vikramabahu. NissankaMalla's half-brother calls himself in his inscription as Siri Sangabo Kalinga Vijayabahu who had



# A Newly ..........

taken the epithet (virudu) SahasaMalla. Is he the Kalinga Vijayabahu of the newly discovered inscription? The date of the inscription can help to answer this, but unfortunately the first line is not clear. But, with the evidence of SahasaMalla's inscription it is possible to rule out that the Vijayabahu of the new inscription is not SahasaMalla. SahasaMalla clearly states that he was invited to Sri Lanka by two ministers to be crowned as king. There is no reference to any assistance from the Chola kingdom, although he sojourned in a Chola port en route to Sri Lanka. The two Sinhalese ministers who invited him and helped him to ascend the throne were rewarded by SahasaMalla. The newly discovered inscription refers to a Chola commander as the one who helped Kalinga Vijayabahu and crowned him. It is here that the Sinhala literary sources help us to identify this ruler. It is known from the Nikāyasangrahayaand the Saddharmaratnākarayathat Kalinga Magha, who seized power in 1215, also had the name Kalinga Vijayabahu. Moreover, all the literary sources agree that Magha captured power with the help of south Indian forces.The new inscription says that a Chola commander helped Kalinga Vijayabahu to become king. This ruler can, therefore, be identified as none other than Magha.



### *Kulottunga's invasions*

Itappears that Chola Kulottunga III (1178-1218) had a role in Magha's invasion. The commander who helped Kalinga Vijayabahu bears the name of Kulottunga Chola.His name in the inscription,Kulottunga Chola Kalingarayan, is comparable with similar names conferred on Chola commanders, feudatories and other dignitaries (such as Kulottunga Chola Kadavarayan and Kulottunga Chola Kacciyarayan).One of the most successful commanders of Kulottunga I had the title of Kalingarayan. Considering these, it would appear that the Kalingarayan of the Gomarankadawela inscription was a Chola commander who was sent by Kulottunga III to sack Polonnaruva. It must be kept in mind that Kulottunga Chola had made several attempts to conquer the island from the time of NissankaMalla.As early as 1187, Kulottunga claims victory over a Sinhalese army sent to assist the Pandyas in south India. The very next year, which was the first year of the reign of NissankaMalla, he claims the conquest of Sri Lanka. Again, in 1194the Chola ruler ordered histroops to invade the island. Kulottunga'snext claim of victory over Sri Lanka is made in 1199.A contemporary Sinhala poem, Sasadāvata, alludes to three invasions from the Chola kingdom.The final claim of conquest by Kulottunga is made in 1212. The Culavamsaand some Sinhala inscriptions (from Bopitiya and Minipe) also refer to invasions from south India in this period. It is,therefore, possible to suggest that the Kalingarayan of the Gomarankadawela inscription was the commander of a Chola army that assisted Magha.

### *Ganga origins of the Jaffna kingdom*

The Kalinga princes who ruled from Polonnaruva belonged to the Kalinga Cakravartti lineage (paramparā) and often add this to their name intheir records (as, for instance, NissankaMalla Kalinga Cakravartti). Kalinga Vijayabahu of our inscription presumably belonged to the same lineage.He is associated with two major developments in the thirteenth century, namely the fall of Polonnaruva and the emergence of the medieval kingdom of Jaffna.Very few details are available about the latter. What little is known indicates that Kalinga Vijayabahuwas forced to move from Polonnaruva and establish his seat of government in the extreme north.The late historical traditions of Jaffna preserve a corrupted form of his name, Vijaya(bahu)KālingaCakravartti becoming Vijaya KūlangaiCakravartti.This view was expressed by the Jaffna philologist, Swami Gnanapragasar, nearly a hundred years ago.As a Gangaraja or member of the Gangavamsa, Kalinga Vijayabahu seems to have been responsiblefor the introduction of the Ganga elements that we see in the name of the capital of the new kingdom (Cinkainakar, the Tamil form of Simhanagar, another version of the Kalinga Simhapurafrom where the Kalinga princeshailed) and the nandi(vrshabhalānchana / couchant bull) emblemwith the crescent moon. This insignia was used by the Eastern Gangas of Kalinga in the seal of their copper plates. The kings of Jaffna used this emblem on their flags and coins.In the Tamil literary works, the rulers of Jaffna are referred to as persons from the Ganga country (kanka-nādan)or simply as Aryas of Ganga (kankai-āriyar). Some of the noblemen serving under the first ruler (Vijaya Kalinga Cakravartti) are stated to have belonged to the Ganga-kula (kankā-kula).

Thus, in many ways, the newly discovered inscription, with its reference to GangarajaKalinga Vijayabahu and Kulottunga Chola Kalingarayan, is a significant addition to the historical documents we have for the thirteenth century history of Sri Lanka.

# “மூத்த கலைஞர்களின் கலைகளைப் பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டும்”

## நேர்காணல்

**எழுத்தாளர், கவிஞர், வில்லிசைக் கலைஞர் தாட்சாயினி சுப்பிரமணிய சர்மா உடனான நேர்காணல்.**



**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

நான் தாட்சாயினி சுப்பிரமணிய சர்மா. பிறந்து வளர்ந்தது திருகோணமலை. எனது அப்பா ஆலய குருக்கள், அம்மா ராஜராஜேஸ்வரி. படித்தது ஆரம் பக்கல்வி விக்னேஸ்வரா கல்லூரியிலும் பின்னர் கிளிவெட்டி மகா வித்தியாலயத்திலும் கற்று பின்னர் பல்கலைக்கழகத்திற்கு தேர்வாகி அத்தருணம் நாட் டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் சென்று அங்கு பட்டப்படிப்பை நிறைவு செய்து இப்போது கொழும்பில், குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

**02) எழுத்துத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்தும்? அதன் முதற் பயணம் குறித் தும்?**

நாட்டில் ஏற்பட்ட அபாய சூழலும், வருத்தப்பட்ட எம் இனத்தின் ஓல குரல்களும் மனதில் ஆர்ப்பரித்து எழுந்தன. பேனாக்களுக்கு உணர்வளித்தன. எனது எழுத்துக்களுக்கு முக்கிய காரணம் எங்கள் பண்பாடு நிறைந்த கிராமிய வாழ்க்கை. உழவு சார் வயல் நிலம்களும், உண்மை நிறைந்த மக்களின் அன் பான வாழ்வியலும் ஆதிப் பெருமைகள் அழிக்கப் பட்ட போது மனம் துடித்தது. முதன் முதலில் எனது. அடைக்கப்பட்ட கனவுகள் என்ற கதை பத்திரிகையில் வெளியானது. இது என் எழுத்தின் முதற்படி மைல் கல்லானது.

**03) எழுத்துத் துறையில் உங்களது இலக்கியப் படைப்புகள் குறித்து?**

கால ஓட்டத்தில் மாறி வரும் எண்ணமும், உணர்ச் சியும் உரிய முறையில் பிறர் உள்ளம் கொள்ள ஆளுமை திறனுடைய உயிர் துடிப்பான கருத்துக் கள் வாழ்வின் சிறந்த சேகரிப்புகள். எம் நிலத்தின் அரிய வாசனைகள். பூவரசங்காற்று, கூடார வண்டி, கடக்க முடியாத திண்ணை –கவிதை நூல்களும், மூச்சு திணறும் கொன்றை மரங்கள் சிறுகதை(30) நூலும், ஆன்மீக நூல் சுப்பிரமணியாமிர்தம் பத்தி ரிகைகளில், நிலம் தொலைத்த மனித பயணம், அழகான பொய்கள், ஐந்து ரூபாய் முட்கிளுவை. இவை என் ஆக்கங்கள்.

**04) திருக்கோணமலையில் பிறந்து, வசித்து வந்த நீங்கள் தற்போது கொழும்பில் வசித்து வருகி றீர்கள். அந்த வகையில், இவ்விரு மாவட்டங்களிலும் இன்றைய இலக்கியத் துறையின் போக்கு எவ்வாறு உள்ளது?**

இன்று திருகோணமலையின் இலக்கிய வளர்ச்சி மிகமிக பெருமை கொள்ளும் அளவு. வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் வாழ்த்த வேண்டிய விடயம். மண் பற்றி வேர் இட்டு பத்திரமாய் இருக்கின்றன. கொழும்பு இங்கும் வளர்ச்சிப் போக்கினை காண முடிகிறது.

**05) தங்களது எழுத்துத் துறையில் கைக்கொள் ளும் உத்திகள் குறித்து?**

உத்திகள் எனும் போது தமிழனின் உயர்ந்த வாழ்க்கை, பண்பாடு, நாகரீகம், கலை மொழி மண் ணின் மானத்தை கட்டிக் காப்பவர்கள் நாம் தானே.

**06) தற்சமையம் எழுத்துத் துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவுள்ளது. இது குறித்து உங்க ளின் கருத்து?**

சிறப்பு பெண்களின் ஆளுமைக்கு சரியான நேரம். மரபிற்கும், புதுமைக்கும் ஓர் பாலம்.

**07) ஒவ்வொரு எழுத்திலக்கியப் படைப்புகளை படைக்கும் போது எவற்றை மையமாகக் கொண்டு எழுதி வருகிறீர்கள்?**

பெண்களின் ஆற்றாமை ஆதிப் பெருமைகள். எங்களின் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வியல். பழக்க வழக்கங்கள். இவை எம்முடன் ஒட்டிக் கொண்டவை.

**08) நீங்கள் வாழும் கொழும்பு பிரதேசத்தில் உங்கள் இலக்கியப் பணிக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

இங்கு பாடசாலைகள், தனியார் கலை வளர்ச்சி குழுமங்கள், கலை இலக்கிய வட்டங்கள் மூலம் இளம் கலைஞர்கள் பாடு பட்டு வருகின்றனர். படைப்புகள் வளர ஊக்கம் அளித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்தியும் நடைமுறையில் வலைதளங்களிலும் வரவேற்கின் றனர்.

**09) கலைஞராக மட்டுமன்றி சமூகத்திற்கு ஆற்றி வரும் சேவைகள் குறித்து?**

நான் குழந்தைகள் மனநல வைத்தியராகவும், மரபு கலைகளின் ஆய்வாளரககவும், தர்ம சேவா சங்க உறுப்பினராகவும் கடமை ஆற்றி வருகின்றேன்.

**10) திருக்கோணமலையில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கான பார்வையும், மூத்த கலைஞர்க ளுக்கான அங்கீகாரமும் எவ்வாறான நிலையில் உள் ளது?**

இளம் கலைஞர்கள் ஆர்வமுள்ள வர்களாகவும், மூத்த கலைஞர்கள் பொக்கிங்கள். அங்கீகாரம் குறை வான நிலையில் உள்ளன. இவர்கள் தொடர்பில் உரிய வர்கள் நடவடிக்கையினை எடுத்து எம் மூத்த கலை ஞர்களின் கலைகளைப் பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டும்.

**11) எழுத்திலக்கியத் துறையில் உங்களது எதிர் கால படைப்புகள் குறித்து?**

எதிர்காலம் தமிழ் பெருமையும், என் பணியும் முடிந்தவரை, மரபுடன்!.

**12) இதுவரையில் கிடைத்த பட்டங்கள், விருதுகள் குறித்து?**

இந்தியாவில் சமூக சிற்பி. அப்துல் கலாம் விழா வில், கம்போடியாவில்( சுப்ரஜனா) திருவள்ளுவர் விருது, செங்காந்தள் விருதும், யாழ் பல்கலைக்கழகம் ஆய்வுச் செம்மல், தஞ்சாவூர் காவேரி அன்னை கலை மன்றம் தமிழ் மலர் விருதும், சங்கவி பிலிம்ஸ் பிறை வேட் ஆவாட் கலா வீபூசண விருதும், கொடுமுடி காசி பாளையம் உதய நிலவு கலைக்கூடம் கவி சிற்பி விருது, 2020ஆண்டின் நந்தவனம் மகளீர் அமைப்பு தங்க தாரகை விருதும், இன்னும்.......

**13) நிறைவாக, சாதித்துக் கொண்டிருக்கும் கலை ஞர்களுக்கு கூற விரும்புவது?**

அன்பு! கலைஞர்களே புதுமையானது வீரம் செறிந் தது. மரணம் வரை வியந்து பார்ப்போம். கடைசி நேரத்தில் இறுதிப் பாசத்தில்....

எண்ண சிறகுகள் உணர்வு பறவைகளாக மாறுதல் சூழலில் சிந்தனை கருத்தில் சுவாச காற்றில் புன்ன கையாய்.பூத்து தாயின் தமிழ். உறவாய் மண் மணம் காப்போம்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# பெருங்கவியினுலகு

கடந்து போதல் ஆத்ம திருப்தி
அது சொற்ப சுகம்.
பின்னால் வாய்பிளந்த சிங்கமாய்
பாய்வதற்குக் காத்திருக்கலாம்
இன்னொரு இடர்.

குளிர்ந்த வருடும் தென்றலையும்
பூவாய்த் தூவும் மழைத்துளிகளையும்
பிறகு அவன் கொடையாக்கினான்.
அது துயரெனும் கொடியதை
கழுவிச் சென்றது.
அறியாத புறத்திலிருந்து
ஒரு தொகை சந்தோஷம் பெருகியது.

மகிழ்வாய் இருத்தலின் கணங்களை
உடல் முழுவதும் பூசுகிறார்கள் மக்கள்.
மனம் மணக்கிறது.

நெருக்கும் இடரும்
அண்மித்த சுடரின் ஒளியும்
மனிதனின் சோதனைகளுக்கான
இறைவரம் எனக் கொள்வோம்.

அவனே,
வாழ்வெனும் பட்டத்தின் நூலைப்
பிடித்துக் கொண்டிருக்கும்
ஒற்றைப் பெருங்கவிஞன்.
கண்களால் தரிசிக்க முடியா
ஒளியின் ஒளி.

- பாலையூற்று அஷ்ரபா நூர்தீன் -

# அம்மான் முகவர்களும் அபலைகளின் கண்ணீரும்...!

வெள்ளிப் பணத்துக்காய்
வீச்சுவலையில் பெண் மீன்கள்
அரபுப் பணக்காரத் துரைகளின்
பள்ளியறைகளுக்கு பரிசளிப்பு.

முகவர்களின்
முப்பரிமாண ஆசைவாத்தைகளில்
முக்குளித்த பெண் ஜன்மங்கள்
குடிசைகளை கோபுரமாக்கவும்
குப்பிவிளக்குகளுக்கு மின்சாரம்
பாச்சவும்
கிளிசல் உடைகளையும்
கிடைக்காத வாழ்க்கையையும்
சீர் செய்துவிடும் கனவுகளுடன்
கண்ணீர் கதையுடன் விடைபெற்று
பயணித்து இறங்கி கால்பதிக்க.....


ஏமாற்றிய குள்ள நரிகள்
உள்ளூரச் சிரித்து
தமது பசிகளையும் ஆற்றி
ஓமானில் அம்மான்களாய் மாறி
அடிமை வியாபாரமாற்றிய
அரிய செயல்கள்
சந்திசிரிக்கும் செய்திகளாய்.

எதிர்பார்ப்புகள்
உடைந்த கண்ணாடித் துண்டங்களாக
உடல்களைக் குத்திக் கீற
இரத்த ரணங்களுடன்
எல்லாமே இழந்து தவிக்கும்
நிலையில்
அபலைகள் ஓலங்கள்.

கோழி திருடியவனும் சேர்ந்தே
தேடுகிறான்
முதல்நாள் இரவில்
ஆணங்காச்சி இறைச்சியை உண்ட
கம கம மணம் இன்னும் மாறாது...!
எல்லாமே மூடுமந்திர
வலைப்பின்னல்களாய்
நீதியே சந்தையில்....
மீதியை என்ன சொல்ல.....?

- ஷெல்லிதாசன்-

# கனவுக் கதிர்



# சங்க காலம்!

## இலக்கிய நயம்



சங்க காலம்,இந்தக்காலம் கூட முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்று காலங்களை கொண்டது. சங்க கால மக்கள் வாழ்க்கைமுறையினை எடுத்துக்கொண்டால் எந்தவொரு மொழிக் கலப்பும், இனக்கலப்பும் இல்லாமல் தமிழ் தமிழாக இருந்த காலம் என்று கூறிக்கொள்ளலாம். சங்ககாலம் பற்றி எழுதப் போனால் அதற்கே இருபது, முப்பது பதிவுகள் தேவைப்படும்.

அதுகுறித்து ஆழமாக போகாமல் சங்க காலத்தில் காதல் ரசம் சொட்டும் பாடல்கள் சிலவற்றை எடுத்து அந்த காதல் ரசத்தை கொஞ்சம் நாக்கில் விட்டு தித்திப்பில் இலகிக்கலாம் வாருங்கள். பொதுவாகவே அன்றிலிருந்து இன்றுவரை தமிழில் வந்த இலக்கிய வகைகள், இலக்கியம் கடந்து காலவோட்டத்தில் வந்த இன்றைய சினிமா வரையான பகுதிவரை (அதுக்காக சினிமாவையும் இலக்கியம் ஆக்கிப்புடலாமா என்று கேட்கக்கூடாது) காதல், வீரம் என்ற இரண்டு கருப்பொருள்கள் எல்லாவற்றிலும் புகுந்துவிட்டது.

உண்மையை சொல்லப்போனால் இந்த காதல், வீரம் ஆகிய இரண்டும் சங்க கால மக்களின் பெரு வாழ்க்கை முறையில் அவர்களின் வாழ்வியங்களாகவே இருந்துவந்தமையும், அவற்றையே இலக்கியங்களும் பாடியமையினாலேயே இந்த மரபணுப்பாய்ச்சல் இற்றைவரை எமக்குள்ளும் பாய்ந்துகொண்டிருக்கின்றது.

சரி காதலை சொல்லமுதல் அந்த வாழ்க்கைமுறை பற்றி கொஞ்சம் தொட்டுவிட்டு போவோமே! சங்ககாலத்தில் ஆண்களும் பெண்களும் சம அந்தஸ்துடனேயே நோக்கப்பட்டார்கள் என்பதுடன், இலக்கியம் வாயிலாக ஆழநோக்கினால் இந்தக்காலத்தில் பெண் அடிமைத்தனம், அபரிதமான பெண்மைக் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை.

அனைவருக்கும் உரிய சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஆண்களுடன் பெண்கள் சகஜமாகப்பழகினார்கள், ஆனால் அவர்கள் அந்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யவில்லை. கற்புநெறியில் சீரிய வாழ்க்கை முறையை கொண்டவர்களாகவே இருந்தார்கள்.

ஆண் என்றால் அவன் வீரனாக இருக்கவேண்டும் என்பதே பெண்ணின் எதிர்பார்ப்பாக இருந்தது. நிலத்தின் தன்மைகளைக்கொண்டு அவர்கள் வாழ்ந்துவந்த இடத்தை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாக வகுத்து வாழ்ந்து வந்தார்கள்.

நிலத்தின் தன்மைகள், அவற்றின்மேலான தொழில், அவற்றின் மூலம் உண்டாகும் இயல்புகள் என்பன இலக்கியங்களில் தாக்கத்தை செலுத்தின. பொதுவாகவே சங்க கால காதல் இலக்கியங்களுக்கு ஆழமான ஒரு வரையறை உண்டு.

அந்த வரையறை உடைபட்டால் அது காதல் இலக்கியமாக (அகம்) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தம்முள் கூடும் இன்னம் இன்தென்று சொல்லாமை, பெயர்சுட்டாமை, ஒவ்வாத காதல், முரணான காதல்கள் (பொருந்தாக்காமம்) அகம் என்று கொள்ளல் ஆகாது. இப்படி நிறைய விதிகளும் உண்டு. இதுகுறித்து ஆழமாக போனாலும் பக்கங்கள் நிறைந்துவிடும்.

விடயத்திற்கு வருவோம் தேர்ந்தெடுத்த காதல் தேன் சொட்டும் செய்யுள்கள் சிலவற்றை பார்ப்போம். மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் உண்டான காதல் இது ஒரு பெண் காதலினால் படும் இன்பவலியை அழகாக எடுத்துரைக்கின்றார் இந்த செய்யுளை இயற்றிய கபிலர்.

**" வேரல் வேலி வேர் கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்திசினோரே சாரல்
சிறு கொட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு,
இவள் உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே.."**

சிறிய ஒரு கிளையில் பாரம் தாங்காமல் தொங்கும் பெரிய பலாப்பழம்போல, காதல் வயப்பட்டு நிற்கும் இவளது காதல் மிகப்பெரியது, ஆனால் அதை தாங்கும் அளவுக்கு அவள் உயிர் பெரியதாகத் தெரியவில்லை. அது மிகச்சிறியது. இந்த வேதனையினையும் விரக தாபத்தையும் யார்தான் அறிவார்களோ!

வேர்ப்பாலாக்களுக்கு மூங்கில் வேலியிட்டு பாதுகாக்கும் மலைநாட்டின் தலைவனே!! என விழிக்கின்றது. அடுத்து இது கொஞ்சம் படு செக்ஸியான செய்யுள்தான். அப்படியே பொருளை சொல்லிவிடமுடியாது. பட்டும்படாமலும் தான் சொல்லவேண்டும் கடைசிவரி பொருளை அப்படியே கண்டுபிடிப்பவர்களுக்கு முழுவதும் விளங்கும். வேண்டுமென்றால் முயன்றுபாருங்களேன். இது ஒரு பெண்ணின் உச்சக்கட்ட விரகாத உணர்வு. நீண்ட நாள் பிரிவின் ஏக்கம். பாலைநிலத்து பெண் ஒருவள் விரகதாப உச்சத்தில் பிதற்றுவதாக கொல்லன் அழிசி என்ற புலவனின் செய்யுள்.

**"கன்றும் உண்ணாது கலத்தினுள் படாது
நல் ஆன் தீம் பால் நிலத்தில் உக்கா அங்கு
எனக்கு அகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும் திதலை
அல்குல் என் மாமைக் கவினே."**

கன்றும் குடிக்காமல், பாத்திரத்திலும் கறக்காமல், நிலத்தில் வீணே வழிந்துபோகும் பசுவின் பாலைப்போல, எனக்கும் உதவாமல், என் தலைவனுக்கும் இல்லாமல் என் அழகும் விணாகிக்கொண்டிருக்கின்றதே (இப்படித் தான் கொஞ்சம் மறைச்சு பொருள் விளக்கம் தர முடியும்)

# வியாபித்து நிற்பேன்

காடுகளின் மொழியில் பரீட்சையம்
அற்றஎன் காதுகளில் எத்தனை
சொற்கள் வந்து விழுகிறது.

ஒவ்வொரு சொற்களுக்குமான
இடைவெளியில்
சருகுகள் மூடிய விதைகள்.

எனை பேண்டு விட்டுப்போன
பறவையை நினைக்கிறேன்
எல்லா திசைகளிலும் அதன் முகம்.

கிடைக்கும் சொற்களை உண்டு
வெடித்துக் கொள்ள
நாட்களை கழிக்கிறேன்.

இன்றோ நாளையோ
நான் வெடித்து விடுவேன்
இந்த காட்டில்.
ஒரு மரமாக
ஒரு செடியாக
ஒரு கொடியாக
அந்த பறவைக்காக
காத்திருப்பதே
என் காட்டின் நியாயம்.

- காரையன் கதன் -

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# பார்வையற்ற குழந்தையின் சிறப்பான தேவைகள்






குழந்தைகள் அவர்கள் வாழும் இந்த உலகத்தைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு உதவும் முக்கிய கருவி பார்வையாகும். பார்வை ஆற்றல் குறைந்து முழுவதுமாக பார்வையை இழக்க அநேகமாக ஒரு பார்வையற்ற குழந்தையால் சாதாரண குழந்தையுடன் போட்டியிட முடியாது. இதன் விளைவாக, பார்வையற்ற குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உடல் வகை மற்றும் பொருளாதார வகையிலும் பிறரை சார்ந்து இருக்கும் நிலை ஏற்படுகிறது.

### பார்வை இழப்பிற்கான காரணங்கள்

ஆற்றல் குறைந்த பார்வை கீழ் வரும் காரணங்களால் ஏற்படலாம்.

பிறவியோடு ஏற்பட்ட பார்வை இழப்பு இவ்வகையில், பிறக்கும் போதே குழந்தை பார்வை இழந்து பிறப்பதைக் குறிக்கிறது.

மரபணுவால் ஆற்றல் குறைந்து, அதன் விளைவாக குறைபாடுள்ள பார்வைக்கான முக்கிய உறுப்புகளான கண்கள் கரு வளர்ச்சியின் போது குறைவுடன் உருவாகிவிடும்.

இக்குழந்தைகள் சுற்றுச் சூழல் பற்றி அறிவதற்கு தொடு உணர்வு மற்றும் கேட்கும் திறனையே பயன்படுத்துவர்.

கண் பார்வையற்ற குழந்தைக்கு வழங்க வேண்டிய அனைத்து உதவியையும், கவனத்தையும் முக்கியமாக செய்து, அக்குழந்தை சுதந்திரமாக இருப்பதற்கும், தன்நம்பிக்கையோடு இருக்கவும், பொருளாதார நிலையை சீராக்கவும் வழிவகை செய்து தரவேண்டும். உடல், சமூகம் மற்றும் மனவெழுச்சி தேவைகளை கவனித்து, சிறப்பான கவனம் செலுத்தி, திருப்தி அளிக்கக் கூடிய பலன்களை பெற வழி செய்ய வேண்டும்.

### உடல் சார்ந்த தேவைகள்

பார்வையற்ற குழந்தையின் பெற்றோர் சிறப்பு கவனம் செலுத்தி, குழந்தைக்கு உணவளித்து, உடை உடுத்த செய்ய வேண்டும். குழந்தையை அவர்களது



தினசரி கடமைகளான கழிப்பறையை உபயோகித்தல், குளித்தல், உடை உடுத்துதல் மற்றும் உணவு உண்ணுதல் போன்றவைகளுக்கு பெற்றோர் பயிற்சி அளிக்க வேண்டும். பார்வையற்ற குழந்தைக்கு வீட்டினுள் சுற்றி வர, எந்த பொருளின் மீதும் தடுக்கி விழாமல், அவர்கள் அடிபட்டுக் கொள்ளாமல் இருக்க சிறப்புப் பயிற்சி மற்றும் அசைந்து செல்லும் பயிற்சியும் பார்வையற்ற குழந்தைகளுக்கு மிக இளவயதிலேயே அளிக்க வேண்டும். பார்வையற்ற குழந்தைகளுக்கு, தங்கள் உடம்பு மற்றும் அவர்கள் இருப்பிடம் மற்றும் சுற்றுப்புறம் பற்றி நன்கு அறிந்திருக்கும்படியும், வசதி உடையதாகவும் செய்து கொள்ள வேண்டும். பெற்றோர்கள் பார்வையற்ற குழந்தைகளை அடிக்கடி மருத்துவரிடம் அழைத்துச் சென்று அவர்களது வலுவற்ற உடலமைப்பை நோய் தாக்காமல் பாதுகாக்க வேண்டும்.

### மனவெழுச்சி மற்றும் சமூகத் தேவைகள்

பெற்றோர் மற்றும் உடன் பிறந்தோர், சிறப்பான உறவை, அணைத்து இறுகத் தழுவுதல், அன்புடன் பாசத்துடன் கொஞ்சுதல், இழந்த நம்பிக்கையை மீட்டளித்தல் போன்றவற்றை பார்வையற்ற குழந்தைகளிடம் பயப்படுத்தும் போதும், மனவெழுச்சியால் பாதிப்படையும் போது செய்வது அவசியம் ஆகும். தொடர்ந்து அன்புடன், மென்மையான பராமரிப்புடன், பாசமுடன் இருத்தல் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உதவியாக இருக்கும். மேலும், பார்வையற்ற குழந்தைகளை நன்கு பராமரிப்பதன் விளைவாக அவர்களின் மனவெழுச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்வதில் பயிற்சி கிடைப்பதாகவும், மனதளவில் பாதுகாப்பாகவும் கருதுவர்.

அன்பு, வெறுப்பு, பொறாமை, பயம், மகிழ்ச்சி போன்றவைகள் நாம் தினந்தோறும் பார்க்கும் சில மனவெழுச்சிகள் ஆகும். ஒரு சிறிய குழந்தைக்கு அதன் மனவெழுச்சியை குறைந்த அளவில் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். ஒரு குழந்தை வளரும் போது அதன் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள பயிற்சியும் கிடைக்கிறது. பயம் மற்றும் திகில் ஆகிய இரண்டும் குடலின் இறுக்கம் தளர்த்துவன் என்று கூறப்படுகிறது. மனவெழுச்சிகளால் பொருந்திக் கொள்ளுவதில் பிரச்சனை உள்ள குழந்தைகள் சிறுநீர்ப்பை கட்டுப்பாட்டை தற்காலிகமாக இழந்து சிறுநீர் கழித்து விடுவார்கள். கவலையுடனும், சிடுசிடுப்பாக இருப்பது, பசி ஏற்படுத்தாமல் உணவை குறைத்து, உண்ணச் செய்து மோசமான ஊட்டநிலை மற்றும் உடல்நலக் குறைவையும் ஏற்படுத்தும். குழந்தைகளுக்கு அவர்களது மனவெழுச்சிகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் திசுபிடிப்பும் மற்றும் வாயின் அருகே நுரையும் தோன்றும்.

ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பு உணர்வு பெறுவதற்கு அன்பு, அரவணைப்பு ஆகியவை தேவைப்படுகிறது. இது போன்ற அரவணைப்பு ஒரு குழந்தையை சரியான வழியில், தன்னம்பிக்கையுடன் செயலாற்றும்படி செய்கிறது. ஒரு பார்வையற்ற குழந்தையின் சமூக உலகம் என்பது அவன் / அவள் பெற்றோர்கள். பெற்றோரின் மனப்பான்மை மற்றும் குழந்தையின் குறைபாட்டை ஏற்றுக்கொள்ளும் தன்மை, நீண்ட நெடுவழி பயணம் போல, அக்குழந்தை தினசரி பிரச்சினைகளை சமாளிப்பதற்கு தன்னம்பிக்கையை குழந்தையிடம் உருவாக்க வேண்டும். ஒரு சாதாரண குழந்தையின் வளர்ச்சியோடு ஒப்பிடும் போது பாதிப்படைந்த குழந்தையின் முழு வளர்ச்சியும் மிகவும் மெதுவாகவே நடைபெறும் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய கருத்தாகும்.

'அன்பு செலுத்து' மற்றும் 'அன்பைப் பெறு'. இதன் அவசியம் மிகவும் உறுதியானதாக ஊனமுற்ற குழந்தைகளிடையே உள்ளது. மிகவும் சக்தி வாய்ந்த அன்பின் பிணைப்புகள் குழந்தைகளை திடுமென வளர்வதற்கு, வளர்ச்சி தொடர்புடைய செயல்பாட்டில் உதவுகின்றன. இதன் பயனாக குழந்தைகள் சமூக சூழலில் நன்கு பொருந்திக் கொள்கின்றனர். சமூக மற்றும் மனவெழுச்சி சார்ந்த பொருந்துதல்கள் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மிக முக்கியமானவை. சுதந்திரமாக செயல்படுவதன் அவசியம்.

குழந்தைகள் தங்கள் சுற்றுப்புறங்களில் உள்ளவற்றை ஆய்வு செய்வதற்கு பெற்றோர் உதவ வேண்டும்.

மேலும், தினசரி பணிகளில் சுதந்திரமாக செயல்படவும் உதவ வேண்டும். முதலில் தலை கேசம் வாருதல், சட்டையில் பொத்தான் பொருத்துதல், காலணிகளில் நூலை கட்டுதல் போன்றவைகளுக்கு நேரம் அதிகமாக செலவிடப்பட்டாலும், விளைவு ஏடாகோடமாக இருக்கும். புகழ்தல் மூலம் குழந்தைகளை உற்சாகப் படுத்தி, ஊக்கப்படுத்தி, புதுப்பணிகளை நம்பிக்கையுடன் செயல்படுத்த வைக்கலாம்.

குழந்தைகள் தங்களது ஆற்றலை வெளிப்படுத்த, அவர்கள் திறன் வாய்ந்தவர்கள் என நினைக்குமாறு செய்வதற்கு, தொழில் பயிற்சி வழிகாட்டுதல் மூலம் பயிற்சி அளித்து, அவன் / அவள் பணி ஏற்பதற்கு அப்பயிற்சி உதவியாக இருக்கும்படி செய்யலாம். இதனால் பார்வையற்ற குழந்தை பிறரை விட தங்களையே சார்ந்து இருப்பது உறுதியாகிறது. நீங்கள் எப்போதாவது பார்வையற்றோர் உபயோகிக்கும் நீளமான வெள்ளை நிறக் கோலை பார்த்து உள்ளீர்களா? கோலில் ஒலி ஏற்படுத்த மணியை பொருத்தலாம்.

### கல்வி கற்றலின் தேவை

மோசமான பார்வை, மொத்த பார்வை இழத்தல், பகுதியான பார்வை இழப்பு உடைய குழந்தைகளுக்கு கற்பித்தல் என்பது ஆற்றக் கூடிய செயல் ஆகும்.

பெரிய அச்சுக்களை உடைய புத்தகங்கள், மற்றும் ஒழுங்கான வெளிச்சமுடைய மேசைகள், பார்வை குறைபாடு உடைய குழந்தைகளுக்கு போதுமானதாக இருக்கும். கருமை போர்டை விட பச்சை வெளிர் கருமை நிற போர்டு, மெருகூட்டப்படாத தாள்கள் மற்றும் மென்மையான கறுப்பு பென்சில்கள் உபயோகிப்பதால், குழந்தைகள் நல்ல படியாக பார்க்க உதவியாக இருக்கும். ஊனமுற்ற குழந்தைகள் சிறப்பு வாய்ந்த கருவிகளைக் கொண்டு, சிறப்பாக கற்பிப்பவர்களின் வழிகாட்டுதல் மூலமாக சிறப்பாக கற்பிக்கப்படுவார்கள்.

கடுமையான குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் சிறப்பான கருவிகளைக் கொண்டு கற்பிக்கப்படுவார்கள். நீங்கள் 'பிரெயில்' பற்றி கேள்விப்பட்டதுண்டா? இது ஒரு வகையாக எழுத்துக்களை படித்தல், எண்கள் மற்றும் வார்த்தைகளை படித்தல், எழுதுதல் முறை ஆகும். அடிப்படை பிரெயிலர் என்பது 6 சாவிகள் கொண்ட, தட்டச்சு இயந்திரம் போன்ற கருவி ஆகும். வலது பக்கத்தில் இருந்து இடது பக்கமாக ஒவ்வொரு புள்ளியாக குத்தப்படுகிறது.

குழந்தைகளுக்கு பிரெயில் உபயோகிக்க ஒழுங்கு முறையாகக் கற்பிக்கப்பட்டால் கற்றுக் கொள்வது வெகு சுலபம். பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்கள், பார்வையற்ற குழந்தைகள் கல்வி கற்க பயன்படுத்தப்படுகிறது. பார்வையற்ற குழந்தைகள் காதால் கேட்கும் திறனை வளர்த்துக் கொள்வது, மிக நல்ல முறையில் கல்வி கற்க உதவியாக இருக்கும். கல்வி மற்றும் பயிற்சி மூலமாக பார்வையற்ற குழந்தைகளுக்கு சிறப்பான கவனம் செலுத்தப்படுகிறது. நடு வயதிலுள்ள ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில், சட்டப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்கு நம்பிக்கை அளிக்கிறது.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பேராண்மையின் முக விலாசங்கள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 200

தன்னலங்களில் தமிழ் மக்கள் ஒருவரை ஒருவர் இழுத்து விழுத்துவதும், அவை தமிழ் மக்களுக்கு தரக்கூடிய பின்னடைவுகளைப் பற்றி அக்கறைப்படாதமையும், பேச்சு வார்த்தைகளுக்கு ஒத்த நிலைப்பாட்டில் போக நடத்தப்படும் முயற்சிகளுக்கு வைக்கப்படும் ஆப்புகளும், 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்று பல வருடங்களாகக் கூறி அரசியல் பாதையில் செயற்பட்டவர்களை ஏதோ ‘துரோகத் தீட்டு’ பட்டவர்கள் என விலக்கி வைப்பதும், அழைப்புகள் தராததும் 13 ஆம் திருத்தம் அடங்கிய பேச்சுக்களுக்கான முனைப்புக்கள் வரும் செய்திகளையும் பார்த்தால் இவை யாவும் வாக்கு வங்கியைக் கண் வைத்து நடத்தப்படும் மேல்தட்டு நகர்வுகளாகவே தெரிகின்றன.

பண்டாரநாயக்கா காலத்தில் தொடங்கி, சிங்களத் தரப்புகள், தங்களது அரசியல் அதிகாரங்களுக்காக இனவாதத்திலேயே முதலீடு செய்து சிங்களத் தரப்புக்களையும் பேரினவாதத்தையும் திருப்திப்படுத்துவதிலேயே இனவாதத்தின் முதலீடுகளை அதிகரித்து பாரிய லாபங்கள் அடைந்தமையால் அதனை தமிழ் மக்களுக்கு எதிரான இனக்குரோதமாக வளர்த்து, அவர்களது(தமிழர்களது) பாரம்பரியங்களை அழித்துவிடப் பேராண்மைகள் செயற்படுகின்றன.

தங்களுடைய மக்களின் விருப்புக்காகவே தாம் செயற்படுகிறோம் என்ற காரணத்தை காட்டி. பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதேபோல் பின்னர் மஹிந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை விலத்தி, போர் நடத்தியதும் தமிழ் மக்கள் கண்ட அனுபவங்கள்.

இடையில் ஏற்பட்ட அரசியல் இணக்கங்களாவது மதிக்கப்பட்டனவா? அவை எல்லாம் கூட கிடப்புகளில் போடப்பட்டன. இவை எல்லாவற்றிற்கும் அவர்கள் வசதியாகச் சொல்லிக் கொள்வது, தமிழ் மக்களுக்குப் பிரிவினைக் கோரிக்கையை கைவிட விருப்பமில்லை, நாட்டைப் பிரிப்பதுதான் அவர்களது இலட்சியம், சமஷ்டி என்பது எல்லாம் அவற்றின் முகமூடிகள் என்பதுதான். பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட போதும், மஹிந்த போருக்குப் போன போதும், இந்தச் சங்குகள் தான் ஊதப்பட்டன.

சிங்கள தரப்புகள் அவை எந்த அரசியல் கட்சியானாலும், எந்த இணக்கத்திற்கு வந்தாலும், அதிகாரத்தில் எந்தச் சிறு பகுதியையும் தமிழ் மக்களுக்கு கையளிக்கப் போவதில்லை. பொருளாதார அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வானாலும் கூட, தமிழ்ப் பகுதிகள் அவற்றால் தன்னிறைவு அடைந்து, தங்களை மிஞ்சி விடுமோ என்ற சந்தேகங்களில் அவற்றைக் கூட இழுத்துத் தங்களது கைகளிலேயே வைத்திருப்பார்கள்.

இந்த உண்மையை அனுபவரீதியாக அறிந்து கொண்டும் – தீர்வுக்கான பேச்சுக்கள் என்பது சிங்கள தரப்புகளால் இழுத்தடிப்பதற்கான மார்க்கம் என்பதை தெரிந்தும் – அனுகுமுறைகளில் எதுவித யதார்த்தங்களும் முன் நிபந்தனைகள் ஏதும் இன்றி, இவற்றில் ஈடுபடுவது தமிழ் தலைவர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தலைகளில் சம்பல் அரைக்கவே உதவும். முன் நிபந்தனை எனும் போது சமஷ்டி தீர்வுக்காகத்தான் பேச வருவோம் என்ற முன்நிபந்தனையைக் குறிப்பிடவில்லை. உடனடியாக 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தை கோரலாம். அல்லது திணைக்களங்களின் காணி அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதை முன் வைக்கலாம். எதுவுமே இல்லாமல் பேச்சுக்காக மேசைகளில் அமர்வது பேசுவதைத் தவிர இவர்களிடம் வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தான் வெளிப்படுத்தும். ஆக மிஞ்சினால் சர்வதேசம் தலையிடும் என்பார்கள். அதை தாங்கள் கணக்கெடுத்து பதில் நடவடிக்கை எடுக்கலாமென சிங்களத் தரப்புக்கள் நினைப்பார்கள். இவற்றிற்கு அல்வா தருவது போல இறந்தவர்களை நினைவு கூர தரப்பட்ட இந்த அரசின் அனுமதியை, தார்மீகமாக அவர்களை நினைவு கூர்ந்து, அதன் செயற்பாடுகளால் சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் அவர்களின் இழப்பையும் வேதனை



யையும் வெளிப்படுத்த வேண்டுமே ஒழிய, அதன் மூலம் அரசியல் கனவுகளை நிரூபிக்கிறோம், அதனை எவ்வளவு இழப்புகளுக்கு இடையேயும் முன்னெடுக்கிறோம் என்ற செய்தியை அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, சர்வதேசத்துக்கும் தந்து, பின்னடை வைத் தேடிக் கொள்ளக்கூடாது என்பதை ஆணித்தரப்படுத்தவே மாவீரர் நினைவுகள் பற்றிய பதிவுகள் தரப்பட்டன.

எவ்வளவுதான் ஏமாற்றமாகவும், வேதனையாகவும் இருந்தாலும், விடுதலைப் புலிகளின் அரசியல் இலட்சியமான தமிழ் ஈழத்தையோ, அதற்கென அவர்கள் வகுத்துக் கொண்டு நடைமுறைப்படுத்திய பாதைகளையோ, சர்வதேசங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைத் திரும்பவும் இப்படியான நினைவு கூரல்களில் இருந்து உணர்ச்சிகளால் உத்வேகம் அடைந்து, மாற்றி அமைத்து விடலாம் என அந்தத் திக்குகளில் பயணிப்பதும் அதற்கான



பிரச்சாரங்களும் பயனற்றவை.

தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை அடைய விடுதலைப் புலிகள் வகுத்த பாதைகள், புவியியல் அரசியலை கணக்கெடுத்து, அதன் நெளிவு சுழிவுகளுக்கு ஏற்ப நடத்தப்படாதமையால் வெற்றியடையவில்லை. தனி நாடு என்ற கோரிக்கையை, விடுதலைப் புலிகள் இல்லாத போதும் தமிழ் மக்கள் மீண்டும் தம் கையில் எடுத்தாலும், அதற்குப் பிராந்திய சக்தியான இந்தியாவிடம் இருந்து ஆதரவு கிடைக்கப் போவதில்லை. பிராந்திய மேலாண்மைக்குப் போட்டியிடும் சீனா கூட பேராண்மை பகுதிகளுக்கு தோள் கொடுக்கிறது. இவை யதார்த்த நிலைகள் என்பதால் தமிழ் மக்கள் கூட தங்களது அரசியல் தீர்வுக்கான பாதைகளை இவற்றில் இருந்து தேர்வு செய்ய வேண்டும். ஒத்த நிலை ஒன்றுக்கு வர வேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் மேல் தட்டு அல்லது மேல் வர்க்கத் தலைவர்கள் ‘ஒன்றிணைந்த, பிரிக்க முடியாத நாட்டுக்குள்’ என்று தீர்வு குறித்துப் பேச ‘ஏக்க ராஜ்ஜிய’ பற்றிய ஒரு சொல்லிலே எவ்வளவு சர்ச்சைகள் நடந்தன? சில தலைவர்கள் அப்படியான தீர்வைப் பேச, கூட்டமைப்பின் வேறு சில தலைவர்கள் சமஷ்டிதான் அடிப்படை எனவும், புலம்பெயர் சென்றால் அந்தத் தரப்புக்களுக்கு ஆதரவாக சுயநிர்ணயம் பெற்று, அதன்பின் சர்வஜன வாக்குகளால் தமிழ் மக்கள் எதை விரும்புகிறார்கள் எனப் பேசி, வெளிநாட்டு அரசின் அதிகாரிகளைச் சந்திப்பதும், இங்கும் மேல்தட்டு வர்க்கம் ஏதோ ஒரு பொறிமுறையை வைத்து விட்டது எனச் சந்தேகித்து, தாங்களும் சென்று பிரேரணைகள் வைப்பதும், கேட்டுப் பார்க்க அலுத்து விடும். அவை ஸ்ரீலங்காவுக்கு வசதியாகி விடுகின்றன.

அந்தப் பின்னணிகளில்தான் ஜனாதிபதி ரணில் கூட தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றாக வந்தால் பேசலாம் என்று அறிவித்தார்.

அரசியல் தீர்வுகள் பற்றி பேசிக்கொண்டிருக்கும் கும்பல்களிடையே ‘கோவிந்தா’ என்பது போல் முன்னைய ஜனாதிபதி மைத்திரி மாவட்ட அபிவிருத்தி சபை முறைகளைப் பரிசீலிக்கலாம் என நாடாளுமன்றத்தில் பேச, அதில் ஜனாதிபதி ரணிலின் பங்கு என்ன என்ற சர்ச்சைகள் கஜேந்திரகுமாரின் அறிவிப்புகளால் தொடர்கின்றன.

ஜனாதிபதி ரணில் உடனடி அதிகாரப் பதிவுக்கு இது ஆரம்பமாகலாம் எனலாம். அது போல 13ஆம் திருத்தச் சட்டமும் ஆரம்பமே.

தாங்கள் இணங்கி கொண்ட மாவட்ட அபிவிருத்தி சபைகளின் பெறுமானங்கள் பற்றி அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜே.ஆருக்கு 10 ஆகஸ்ட் 1983 இல் அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தார்:–

“உங்களது அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு தரப்பட்ட இரண்டாவது பெரிய சலுகை மாவட்ட அபிவிருத்தி சபைகள், அதிகாரப் பரவலுக்கான வழிமுறையாக அமைக்கப்பட்டது என நீங்கள் கூறுவது. எங்களுக்கிடையே கூட பெரும்பாலான அபிப்பிராய பேதங்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் அது உட்பட்டாலும் நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம். நீங்கள் இதனை ஜூலை 1979 தொடங்கினீர்கள். ஆனால் இந்த நான்கு ஆண்டுகளில் அதிகாரப் பகைவு என்ற விடயத்தில் நாங்கள் எவ்வளவு தூரம் முன்னேறி உள்ளோம்? 1981 இல் அதற்கான தேர்தலில் சிங்கள பொலிஸ் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் அடாவடித்தனம் செய்து, யாழ்ப்பாணத்தின் அரைப் பகுதியை எரித்ததில், கூட்டணியின் தலைமை காரியாலயமும் நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லமும் கூட எரிந்து நாசமாகின.

“இவற்றை மேற்பார்வை பார்த்தவர்கள் உங்களது அரசின் இரண்டு மந்திரிகள். அவர்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்படுவதைக் கூடக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி இருந்தும் நாங்கள் மாவட்ட சபையை இயக்குவதற்கு ஒத்துழைத்தோம்.

ஆயினும் கடந்த இரண்டு வருடங்களாக எதுவுமே நடைபெற்றதில்லை. தமிழர்களோடு இணங்கிக் கொண்டவற்றில் அரசாங்கம் காட்டும் அக்கறைகள் இவ் வளவே” – எனக் குறிப் பிட்டு, இணங்கிக் கொண்டும் ஒரு நடவடிக்கைகளும் எடுக்கப்படாத எவ்வளவோவற்றைப் பற்றி குறிப்பிடுகின்றார்.



House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

கூட்டணியின் இளம் தலைவர்கள் அறிந்திராவிட்டாலும் சம்பந்தன் இவற்றின் பங்காளியாக இருந்தவர். சிங்கள தரப்புகளுடன் ஏற்படுத்தப்படும் இணக்கங்களை அமுல்படுத்த அவர்களே விரும்பினாலே ஒழிய அழுத்தமோ கண்டிமைப்போ கொடுத்துச் செய்ய முடியாது.

ஆனால், 13 ஆம் சட்ட திருத்தத்தில் இந்தியா அழுத்தம் தர இடம் உண்டு என்பதை மனத்தில் நிறுத்த வேண்டும். அதற்கான அனுகுமுறைக்கான மனோபாவங்களும் வளர வேண்டும்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# திருச்சிலுவைக் கன்னியர் சுகநல நிலையத்தின் 40 ஆண்டுகள் நிறைவின் நினைவுப் பதிவுகள்

அருட்சகோதரி
பெனிற்றா பாக்கியநாதர்

**இலக்கம் 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் திருச்சிலுவை சுகநல நிலையம் பணியில் 40 ஆண்டுகளை 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட்டு நிற்கிறது. நிலையத்தினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொண்டு றூபி ஆண்டு என்று அழைக்கப்படும் 40ஆவது ஆண்டு நிறைவில் இவர்கள் வெளியிட்ட சுகநலம் என்ற சஞ்சிகையில் இருந்து சில முக்கிய ஆக்கங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**



### முன்னுரை

ஒரு நிறுவனம் 40 ஆண்டுகள் தொடர்ந்து பயணிப்பது அதன் வளர்ச்சியில் சிறப்புப் பொருந்திய மைல் கல்லாகும். மனித நேயப்பணியினை மனக்கண் முன் கொண்டு காலத்திற்குக் காலம் எதிர் கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுத்து அத்தோடு கூட்டு ஒருங்கிய உணர்வோடு பயணிப்பதும் வரலாற்றுப்பதிவு கொண்ட அனுபவம் ஆகும். இவ்வாறு கடந்த 40 ஆண்டுகள் திருச்சிலுவைக் கன்னியர் வழி நடந்த பயணம் உண்மையில் அவர்களது ஆன்மீகப் பயணமே. 2022 கார்த்திகை திங்கள் 17 ஆம் நாள் திருச்சிலுவை சுகநல நிலையம் தனது 40 ஆவது ஆண்டு நிறைவில் தமது தடம் பதித்த வரலாற்று அனுபவங்களை நினைந்து இறைவனுக்கும் சக மனிதருக்கும் நன்றி கூறுதல் சாலப் பொருத்தமானதாகும்.

### திருச்சிலுவைக் கன்னியரின் அருங்கொடை

மனித அவலங்களும் சமூக சீர்கேடுகளும் மலிந்த காலத்தில் சுவிட்சர்லாந்து தேசத்தில் ஒரு புதிய சமுதாயத்தைப் பிறப்பிக்க வேண்டும் என்று கனவு கண்டார் புனித பிரான்சிஸ்கன் கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் தியோடோசியஸ் புளோறன்ரின் அடிகளார். மனிதம் மதிக்கப்பட வேண்டும், மனித மாண்பு போற்றப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு இவர் 1844 ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க துறவற சபையை மெஸ்சிங்கன் என்ற சிறிய கிராமத்தில் நிறுவினார். ஆரம்பக் குழுவில் ஆர்வம் மிக்க இளம் யுவதிகளாகிய பேர்ணாடா கெயிம்காட்னர், பெல்சியானா, கொர்னேலியா ஆகிய மூவர் அடங்கிய குழுவினரோடு இத் துறவற சபை ஆரம்பமானது. எல்லா துறவற சபைக்கும் உரித்தான சவால்களையும் சிலுவைகளையும் எதிர் கொண்ட இச் சகோதரிகள் திருச்சிலுவைக் கன்னியர்கள் என்ற பெயரை தேர்ந்தெடுத்து 'சிலுவையில் மீட்பு' என்ற விருதுவாக்கையும் தமது மூச்சாகக் கொண்டனர்.

### இலங்கை மண்ணில் கால்பதித்த கன்னியர்

அன்றைய யாழ் மறைமாவட்ட ஆயர் யோண் அல்பிறட் கியோமார் ஆண்டகை திருச்சிலுவைக் கன்னியர்களின் மருத்துவப் பணி இலங்கையில் குறிப்பாக யாழ் மண்ணில் ஆற்ற வேண்டும் என அழைப்பு விடுத்தார். 'காலத்தின் தேவையே இறை சித்தம்' என்ற நம்பிக்கையில் வளர்க்கப்பட்ட எம் முன்னோர் 1930 ஆம் ஆண்டு யாழ் மண்ணிலே முதன்முதலாக ஊர்காவற்துறை அரசினர் வைத்திய சாலையில் தம் மருத்துவப் பணியை ஆரம்பித்தார்கள்.

அவர்கள் தமது மருத்துவப் பணி வைத்தியசாலையில் மட்டுமல்ல அன்பு ஆதரவற்று வாடும் முதியோருக்கும் சென்றடைய வேண்டுமென்று அவர்களின் தலைமைப்பீடம் உணர்ந்தது. அதற்கேற்ப அன்றைய யாழ் ஆயரின் வேண்டுகோளுக்கிணங்க 1935 ஆம் ஆண்டு கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தின் பொறுப்பையும் ஏற்றுகொண்டனர்.

1938இல் திருச்சிலுவைக் கன்னியர்களின் மருத்துவப் பணி யாழ் போதனா வைத்திய சாலையில் தடம் பதிக்கத் தொடங்கியது. நோயாளர்கள் மட்டில் இவர்கள் காட்டிய காருண்யம், அன்பு ததும்பும் உரையாடல், பரிவுடன் கூடிய பராமரிப்பு போன்ற அவர்களின் உயரிய பண்புகள் 'நடமாடும் சம்மனசுகள்' என்ற பெயரை அவர்கள் அடைந்து கொள்ள ஏதுவாயிருந்தது.

25 வருடங்களாக இந்திய மாகாணத் தலைமையின் கீழ் இயங்கி வந்த திருச்சிலுவைக் கன்னியர் குழுமம் 1955 இல் தனி மாகாணமாக உயர்வு பெற்றது. அருட் சகோதரி அலோசியா றூஸ்லி இப் புதிய மாகாணத் தலைவியானார்.

### யாழ் எல்லைகளைக் கடந்து பணி விரிவடைதல்

யாழ் மண்ணில் ஆற்றிய பணியைத் தொடர்ந்து திருச்சிலுவைக் கன்னியர்களின் மருத்துவப் பணி ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் அனுசரணையோடு கொழும்பு மறை மாவட்டத்தையும் சென்றடைந்தது. 1958 இல் திரு.மைக்கல் கோமஸ் என்பவரின் அழைப்பை ஏற்று புனித. மைக்கல் வைத்திய நிலையம் என்னும் தனியார் மருத்துவமனையிலும் பணி தொடர்ந்தது. யாழ் மண்ணில் மருத்துவப் பணி, வயோதிபரை பராமரிக்கும் பணியை ஆற்றி வந்த அருட் சகோதரிகள் 1959 இல் குழந்தைகளைப் பராமரிக்கும் பணியையும் யாழ் குருநகரில் பொறுப்பேற்றனர்.

வாழ்வில் வரும் கஷ்டங்கள், துன்பங்கள் கண்டு துவண்டு விடாது இறை பராமரிப்பிலும், தன்னம்பிக்கையிலும் உறுதி கொண்டவர்களாக வாழ முற்படும்போது, மனிதர்கள் வாழ்க்கையில் முன்னேற பல வாய்ப்புக்கள் கொண்ட வழிகள் அவர்கள் முன்தோன்றும். எங்கெல்லாம் அவர்கள் பணி தேவையாயிற்றோ அங்கெல்லாம் அருட்சகோதரிகள் தம் சக்திக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப தம்மை அர்ப்பணித்தார்கள். இவ்வாறு பிற மாவட்டங்களிலும் தம் பணித்தளங்களை அமைத்துக் கொண்டார்கள்.

### சுகநல நிலைய அடிக்கல் நாட்டல்

1960 ஆம் ஆண்டு தனியார் மருத்துவமனை அமைக்க கொழும்புத்துறையில் அடிக்கல் நாட்டப்பட்டது. புதுடில்லியில் இருந்து வருகை தந்த திருத்தந்தையின் தூதுவர் அடிக்கல்லை நாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளை அரச மயமாக்கியதன் காரணமாக இம் முயற்சி கைவிடப்பட்டது. 1960 இல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் மேலைத்தேச கன்னியர்கள் வைத்தியசாலையில் பணி புரிவதற்குத் தடைவிதிக்கப்பட்டது. குறுகியகால அவகாசத்தில் அவர்களில் பலரை நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பித்தனர். இப்படிப்பட்ட சூழலிலும் மனம் சோர்ந்துவிடாது மிகுதியாக விடப்பட்ட அருட்சகோதரிகள் ஒரு சிறிய குழுவாக இணைந்து தம் பணியைத் தொடர்ந்தனர்.

1963 ஆம் ஆண்டு அரச வைத்தியசாலையில் அருட்சகோதரிகள் பணி செய்ய தடை செய்யப்பட்டது. அதன் காரணமாக திருச்சிலுவைக் கன்னியர்களுக்கென்று ஒரு வைத்தியசாலையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஓர் உந்துதலை திருச்சிலுவை மாகாண முதல்வர்களின் உள்ளங்களிலும், யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர்களான எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை, தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆகியோரின் உள்ளங்களிலும் ஏற்படுத்தியது.

இதன் முன்னெடுப்பாக 1982ம் ஆண்டு பங்குனித் திங்கள் 19 ஆம் நாள் திருச்சிலுவைக் கன்னியரின் சுகநல நிலையத்திற்கு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் மாகாணத்தலைவி அருட்சகோதரி யசிந்தா மரியாம்பிள்ளை, அருட்சகோதரி எட்மண்டா போவர் மற்றும் அருட்சகோதரிகள் முன்னிலையில் அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் கட்டட வேலைகளை இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த அருட்சகோதரி இசபெல் பொறுப்பேற்று தனது கடும் உழைப்பால் அதே ஆண்டு 1982 கார்த்திகை மாதம் 17ஆம் திகதி திருச்சிலுவை சுகநல மருத்துவமனை என்ற பெயரில் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

### வைத்திய சேவையின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள்

திருச்சிலுவைக் கன்னியர் மேலைத்தேய நாடுகளில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இலங்கையில் கால்

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

பதித்த காலத்தில் இருந்து திருச்சிலுவைக் சுகநலத் துறையில் சிறப்புப் பணி ஆற்ற வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தனர்.

சுவிட்சர்லாந்து நாட்டில் இயங்கி வரும் சபையின் உயர் மட்ட நிர்வாகத்தினரின் விருப்பும் ஆதரவும் எப்பொழுதும் இலங்கையில் பணியாற்றிய திருச்சிருலுவைக் கன்னியர் மட்டில் உறுதியாக இருந்தது என்பது யாரும் மறுக்க முடியாத வரலாற்று உண்மை ஆகும்.

ஏறக்குறைய 25ஆண்டுகள் இந்திய மாநிலத்தின் மாகாணத் தலைவிகள் குறிப்பாக அருட்சகோதரி ஐடா முலாரிக்கல் தமது வழிநடத்துதலாலும், தகுந்த பயிற்சி அளிப்பதனாலும் சுகநல நிலையத்தின் நிறுவுதலுக்கும் கட்டட வேலைகளுக்கும் உறுதியோடு பணியாற்றினார்கள் என்பது மற்றொரு வரலாற்று உண்மை ஆகும்.

ஜேர்மனிய நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி எட்மண்டா போவர் (Edmunda Bauer) அவர்கள் மாகாணத் தலைவியாக இருந்த காலத்தில் சுகநல நிலையக் கட்டடம் ஆரம்பித்து நிறைவு கண்டது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். இவர் கட்டடத்தின் முழுப் பொறுப்பையும் தன் மேல் சுமந்து தம் இனத்தவரின் பண உதவியுடனும் பலரின் ஒத்துழைப்புடனும் முதல் கட்டடத் தொகுதியை நிறைவு செய்தார். இந்நிலையம் இன்னும் பல வசதிகளுடன் நோயாளரை வரவேற்கும் ஓர் பணிமனையாகத் திகழ வேண்டும் என்ற அருட்சகோதரி எட்மன்டா பேவர் என்பவரின் கனவு வீண் போகவில்லை. அந்த வகையில் திருச்சிலுவைக்கன்னியர்களின் சுக நல நிலையத்தின் நிறுவுநர் அருட் சகோதரி எட்மண்டா போவர் (Edmunda Bauer) அவர்களே என்பது ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

(தொடரும்....)

## கொழும்பு - பலாலி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனம் செலுத்தப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை மற்றும் காணி விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற - 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுற்றுலாத்துறை, சுற்றாடல் துறை மற்றும் வனஜீவராசிகள் ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம். ஆலோசனைகளை முன்வைக்கலாம்.

யாழ்.பலாலி விமான நிலையத்துக்கான 'லயன் எயார்' விமான சேவை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை சேவையை மேம்படுத்துவது பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் மேம்பாட்டுக்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம் என்றார்.

சென்னை - பலாலி சர்வதேச விமான சேவையும் 12 ஆம் திகதி தொடங்க இருப்பது தெரிந்ததே.

## களனி மின் உற்பத்தி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவுக்குள் நப்தா கிடைக்கவில்லை எனின், மின்நிலையம் மூடப்படும் என்றும் மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான அன்ட்ரூ நவமணி நேற்றுக் குறிப்பிட்டுள்ளார்.

4,000 மெற்றிக்தொன் நப்தா மூலம் 165 மெகாவோட் மின்சாரம் நாளாந்தம் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் நேற்றிரவு வரை தேவையான நப்தா காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின்நிலையத்தை மூடும் பட்சத்தில் மின்வெட்டை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்றும் நிலைமையை பரிசீலித்து, மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டுமா என்பதை ஆராயவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மக்கள் போராட்டம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை என்று, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

'மக்கள் இனிப் போராட்டம் நடத்தினால் இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மீண்டும் கூறி வருகின்றமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது நன்றாகக் குழம்பிப் போய் இருக்கின்றார். நாட்டின் நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து கொண்டு செல்கின்றதே தவிர முன்னேற்றமடையவில்லை.

இதனால் மீண்டும் மக்கள் வீதிக்கு வருவார்கள். இதை உணர்ந்ததால்தான் ஜனாதிபதி இந்த நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர்களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். மக்கள் இதற்கெல்லாம் அஞ்சப்போவதில்லை. அவர்கள் மீண்டும் வீதிக்கு வருவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராவதற்கு முன் நாடாளுமன்றில் ஆற்றிய உரைகளைக் கொஞ்சம் எடுத்துப் பாருங்கள். மக்கள் போராட்டத்துக்கு நூறு வீத ஆதரவு தெரிவித்துப் பேசி இருந்தார். நூறு வீத ஜனநாயகவாதியாகத் தன்னைக் காட்டி இருந்தார்.

போராட்டக்காரர்களின் குரலுக்குக் காது கொடுக்க வேண்டும். அவர்களின் போராட்டம் சரியானது என்றெல்லாம் ஜனாதிபதி கூறி இருந்தார்.

இன்று ஜனாதிபதியானதும் அப்படியே தலைகீழாக மாறிவிட்டார். அவர் செயற்படுவது நாட்டு மக்களுக்காக அல்ல. 'மொட்டு'க் கட்சியினருக்காக - ராஜபக்ஷ குடும்பத்துக்காக. அதனால் அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கும் விதமாக அவர் செயற்படுகின்றார்.

தங்களைப் பாதுகாக்கக்கூடிய சிறந்த பாதுகாவலன் ரணில்தான் என்று ராஜபக்ஷ குடும்பத்துக்குத் தெரியும். அதனால் தான் அவரைக் கூட்டி வந்து ஜனாதிபதியாக்கி இருக்கின்றார்கள் என்றார்.

## வட. - கிழக்கு மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

எவ்வித திட்டமிடலும் இல்லாத வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தினால் அப்பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

இடைநிறுத்தப்பட்டுள்ள நிர்மாண பணிகள் மீள ஆரம்பிக்கப்படும்,புதிய வீடமைப்பு திட்டங்கள் ஏதும் ஆரம்பிக்கப்படமாட்டாது என வீடமைப்புத்துறை அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நல்லாட்சி அரசாங்கத்தில் நன்மை என்று கருதி செய்த விடயங்களில் வீட்டுத்திட்டம் உரிய இலக்கை அடையவில்லை. வீட்டுத்திட்டம் சிறந்ததாக அமைந்திருந்தால் இன்று ஏழ்மை நிலையில் வாழும் மக்கள் நன்மை அடைந்திருப்பார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அறிமுப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டத்தினால் ஏழ்மையில் வாழந்த மக்கள் இன்று மென்மேலும் பாதிக்கப்பட்டு, வங்கி கடனால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வீட்டுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியுதவி இதுவரை முழுமையாக மக்களுக்கு கிடைக்காததால் மக்கள் அரைகுறை குடியிருப்புக்களுடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தி திட்டங்களை பிறிதொரு அரசியல் கொள்கை கொண்ட கட்சி ஆட்சிக்கு வரும் போது அந்த அபிவிருத்தி திட்டத்தை கண்டு கொள்வதில்லை.

வீட்டுத்திட்ட கடனால் பெரும்பாலானோர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்கள். பலர் சொல்லொணாப் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கிறார்கள்.

ஒரு அரசாங்கம் எடுத்த செயற்திட்ட அபிவிருத்தி பணிகளை தொடரக் கூடாது என்ற நிலைப்பாடு அரசுகளுக்கு இருக்க கூடாது. வீட்டுத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு என்ன தீர்வு? நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாக உள்ளார். - என்றார்.










காலைக்கதிர்
Kalaikkathir

# தேர்தலை பிற்போடும் சூழ்ச்சியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு!

## அநுரகுமார குற்றச்சாட்டு



தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழு சூழ்ச்சிகரமாக செயற்படுகின்றமை தெளிவாக விளங்குகிறது. தேர்தலைப்பிற்போடும்சூழ்ச்சியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓடி வந்து நாட்டு மக்களுக்கு உண்மையை அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கானவரவு – செலவுத்திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு வனஜீவராசிகள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு விரைவாக வந்து பதிலளித்து விட்டு, மீண்டும் விரைவாக சபையை விட்டுச் செல்கிறார். 2023 ஆம் ஆண்டு 20 ஆம் திகதிக்கு முன்னர் புதிய உள்ளூராட்சி மன்றம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டு 20 ஆம் திகதிக்கு முன்னர் புதிய உள்ளூராட்சி மன்றத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின் வேட்பு தாக்கல் செய்வதற்கான வர்த்தமானியை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இந்த மாதத்துக்குள் வெளியிட வேண்டும். தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அரசமைப்பால் இந்த அதிகாரம் உரித்துடையாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமா அதிபரின் ஆலோசனை கோரியுள்ளதை அறிய முடிகிறது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அதிகாரம் உள்ளது, ஆகவே, உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோருவது பயனற்றது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் கோரலுக்கான வர்த்தமானி அறிவித்தலை எந்நேரமும் வெளியிட முடியும். தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழு சூழ்ச்சிகரமாகச் செயற்படுகின்றமை தெளிவாக விளங்குகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதியை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள்ஆணைக்குழுவிற்கு உண்டு. ஆனால்ஆணைக்குழு தொடர்ந்து காலம் தாழ்த்தி வருகின்றமை ஏதோவொரு சூழ்ச்சி இடம்பெறுவதை நன்கு அறிய முடிகிறது. ஆகவே, ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு விரைவாக வருகை தந்து எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதைப் போன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதையும் ஓடிவந்து குறிப்பிட வேண்டும்.

தேர்தல் தொடர்பில் அரசாங்கத்தின் சமிஞ்சையை எதிர்பார்த்த நிலையில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளது. ஆகவே, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா எவ்வாறு செயற்பட்டார், யாருக்காக செயற்பட்டார், எவரது அரசாங்கத்தில் எந்த பதவி வகித்தார் என்பதை நன்கு அறிவோம். அவர் சுயாதீன நபர் அல்லர், அரசியல் ரீதியில் இவர் தொடர்புப்பட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் பிற்போடும் சூழ்ச்சியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக்கோருவது அவசியமற்றது. அத்துடன் சட்டமா அதிபரின் ஆலோசனையை நாட்டு மக்களுக்கு குறிப்பிடப் போவதில்லை எனவும்தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, தேசிய தேர்தல் ஆணைக்குழு அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். – என்றார்.

# சண்டியர்களை கொண்டு மக்கள் போராட்டத்தை முடக்கமுயற்சித்தால் பாரிய விளைவுகள் ஏற்படும்!

## சரத் பொன்சேகா எச்சரிக்கை




சண்டியர்களை கட்டுப்படுத்தாமல் உரிமைக்காகப் போராடும் மக்களை காலி முகத்திடலில் இருந்து வெளியேற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் வெட்கக் கேடானவை.

சண்டியர்களைக் கொண்டு மக்கள் போராட்டத்தை முடக்க முயற்சித்தால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை புதிதாகக் குறிப்பிட வேண்டிய தேவை இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

யானை மற்றும் வனஜீவராசிகள் சுதந்திரம் மற்றும் மிருகங்களின் நலன் தொடர்பில்அவதானம்செலுத்தப்படுகிறது. தற்போது இந்த நாட்டில் விலங்குகளுக்கு உள்ள சுதந்திரம் கூட மனிதர்களுக்கு இல்லை. போராட்டத்தில் ஈடுபட முடியாத நிலையில் அவர்கள் உள்ளார்கள், அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

சிரேஷ்ட சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு உட்பட தரப்பினர் காலி முகத்திடலில் அண்மையில் அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இந்த இடத்துக்கு சண்டியர்கள் வருகை தந்து அவர்களின் சுற்றுலாத் துறை சேவை, ஓட்டோ சேவைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்கள்.

மே 09 ஆம் திகதி தினத்தைபோல் சண்டியர்களை கொண்டு போராட்டத்தை முடக்க முயற்சித்தால் ஏற்படும் விளைவு எத்தன்மையில் அமையும் என்பதைப் புதிதாகக் குறிப்பிட வேண்டிய தேவையில்லை. சண்டியர்கள் போராட்ட இடத்துக்குச் சென்ற போது பொலிஸார் செயற்பட்ட விதம் வெட்கக் கேடானது.

சுண்டி சண்டியர்களைப் பாதுகாக்காமல் உரிமைக்காகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை காலி முகத்திடலில் இருந்து பொலிஸார் வெளியேற்றும் போது பொலிஸாரின் சீருடை கௌரவம் எவ்வாறு பாதுகாக்கப்படும். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இடம்பெறக் கூடாது.

சர்வதேச உதைபந்தாட்ட போட்டி கட்டார் நாட்டில் இடம்பெறுகிறது. கட்டார் நாட்டின் இளவரசர் உணர்வுபூர்வமாக, ஒழுக்கமாக, முறையாக, வெளிப்படைத் தன்மையுடன் இந்த விளையாட்டுப் போட்டியை ஒழுங்குபடுத்தி சிறந்த முறையில் நடத்துகிறார். இவர்களை சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் அரசராகும் கனவுடன் இளவரசர் ஒருவர் கடந்த காலங்களில் இருந்தார். கட்டார் நாட்டு இளவரசருக்கு கிடைத்த உதைபந்தாட்ட போட்டி போன்று செயற்திட்டம் ஒன்று இவருக்கு கிடைத்தால் எவ்வாறு இருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன், வங்குரோத்து நிலை அடைந்துள்ள நாட்டில் மிகுதியாக உள்ள வளம் கூட மோசடி செய்யப்பட்டிருக்கும். – என்றார்.

# புவிச்சரிதவியல், சுரங்க திணைக்களத்தின் தலைவரை உடன் பதவி நீக்க வேண்டும்!

## சாணக்கியன் வலியுறுத்து



சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி பெருமிதமாகக் குறிப்பிடுகிறார். ஆனால் புவிச்சரிதவியல் திணைக்களம் சூழல் பாதிப்புக்கு பிரதான நிறுவனமாகக் காணப்படுகிறது, ஆகவே புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க திணைக்களத்தின் தலைவரை உடனடியாக பதவிநீக்க வேண்டும். 15 நாள்களுக்கு கால அவகாசம் வழங்குவேன்.

15 நாள்களுக்குள் அவரை பதவி நீக்காவிடின் சுற்றுச் சூழல் தொடர்பில் சர்வதேச ஊடக சந்திப்பை நடத்துவேன் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வனத்துறை மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் செயற்பாடுகளால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலும், நாடாளுமன்றத்திலும் உரையாற்றி இது வரை பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுத் தலைவர் இந்த விடயத்தில் எம்முடன் இணங்குவார் என எதிர்பார்க்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்டம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் யானை மோதல் தாக்குதலால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை, வவுணத்தீவு, செங்கலடி மற்றும் கிரான் ஆகிய பிரதேசங்களிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள், விளை நிலங்களுக்கு யானைகள் உட்பு குந்து பயிர்களை நாசம் செய்து, மக்களின் குடியிருப்புக்களில் புகுந்து வீடுகளுக்கு சேதம் விளைவிக்கிறது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். வனஜீவராசிகள் அதிகாரிகள் மற்றும் வன சேவையாளர்களுக்கு வன வளத்துறை தொடர்பான தொழினுட்ப ரீதியான பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

பல ஆண்டு காலமாக வனவளத் துறையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை. வனவள அதிகாரிகளின் சேவை முழுமையாக செயற்படுத்தப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2022இல் வெளியிடப்பெற்றது.